Koviloor Digital Library

IMS0732

நர்மதா வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

தினம் ஒரு

திருக்குறள் தேன்

தேர்ந்தெடுக்கப்பட்ட 365 குறள்கள்!

IMS0732 IMS0732

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நானா தெரு, தி.நகர், சென்னை – 17.
செல்லிடபேசிகள் : 98402 26661, 98409 32566

Koviloor Digital Library

நர்மதா ✆ : 2433 6312, 2433 6313, 2433 4397

Pages : 384

Price : Rs. 60.00

❑ Dhinam Oru Thirukkural Thaen! - A Kural everyday - 365 selected Thirukural couplets for youngsters ❑ This Edition March 2015 ❑ Published by T.S. Raamalingam, Narmadha Pathipagam, Chennai - 600 017 ❑ D.T.P. Execution at M/s Muthu Graphics, Chennai - 600 033. ❑ Printed at M/s The Coronation Arts Crafts, Chennai - 600 034 ❑

Koviloor Digital Library

கரும்பில் இருக்கலாம், அடி, நுனி சுவை வேறுபாடு. கட்டித் தங்கத்திற்கும் தங்கத் தமிழ்த் திருக்குறளுக்குமில்லை. கொஞ்சம் பிட்டு சுவைத்தாலும் முழுக்க அருந்தினாலும் தீஞ்சுவைதான்.

தமிழரின் வாழ்வியல் கருவூலம் திருக்குறள். ஈராயிரம் ஆண்டுகளாய் தமிழரின் வேதம். இனிவரும் காலங்களுக்கும் இதுவே கலங்கரை விளக்கம்.

Koviloor Digital Library

சொட்டுத் தேனை விட்டுச் சுவையறியச் செய்யுமாற் போல இங்கே ஒரு குறு குறள் விருந்து காத்திருக் கிறது. முழுவதையும் மாந்திட இது ஒரு இனிய தூண்டுகோல் மட்டுமே.

அறமும் பொருளும் மட்டுமே இங்கே அணி வகுத்திருக்கின்றன. படியுங்கள். பரிசளியுங்கள். நம் வாழ்வு மேன்மையுறட்டும்.

– நர்மதா பதிப்பகத்தார்

Koviloor Digital Library

ஜனவரி

வாழ்வென்னும் வெகுமதியை கடவுள் நமக்கு வழங்கியிருக்கிறார். நம் வாழ்தலைப் பொறுத்தே அது மகிமையடைகிறது.

Koviloor Digital Library

ஜனவரி - 1

அதிகாரம் : கடவுள் வாழ்த்து குறள் எண் : 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்களுக்கெல்லாம் முதன்மை யானது 'அ'. அதுபோல உலகத்துக்கு முதன்மையானவன் கடவுள்.

Koviloor Digital Library

ஜனவரி - 2

அதி : கடவுள் வாழ்த்து குறள் : 2

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

கடவுளின் திருவடிகளை வணங்காதவன் என்ன படித்தும் ஒரு பயனும் இல்லை.

Koviloor Digital Library

ஜனவரி - 3

அதி : கடவுள் வாழ்த்து குறள் : 3

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்புலன் ஆசைகளையும் ஒழித்த, இறைவனது மெய்யான ஒழுக்க நெறியில் நிற்பவர் பிறப்பும் இறப்பும் இல்லாமல் நிலைத்து வாழ்வர்.

Koviloor Digital Library

ஜனவரி - 4

அதி : கடவுள் வாழ்த்து குறள் : 7

தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு நிகர் இல்லாதவராகிய இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைப்பவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு மனத்தில் நிகழும் துன்பங்களைப் போக்கிக் கொள்ளல் இயலாது.

Koviloor Digital Library

ஜனவரி - 5

அதி : கடவுள் வாழ்த்து குறள் : 10

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

இறைவனடி சேர்ந்தாரே பிறவியாகிய பெரிய கடலை நீந்திக் கடப்பர். இறைவனின் திருவடிகளை நினைக்காதவர் பிறவியாகிய கடலை நீந்திக் கடக்க மாட்டாமல் அதனுள் ஆழ்வர்.

Koviloor Digital Library

ஜனவரி - 6

அதி : வான் சிறப்பு குறள் : 12

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உண்பவர்களுக்குச் சிறந்த உணவுகளை உருவாக்கிக் கொடுத்து அவற்றை உண்பவர்களுக்குத் தானும் உணவாக இருப்பது மழையாகும்.

Koviloor Digital Library

ஜனவரி - 7

அதி : வான் சிறப்பு குறள் : 16

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.**

மேகத்திலிருந்து மழைத்துளி விழுந்தால் அல்லாது இவ்வுலகில் பசுமையான ஒரு புல்லின் நுனியையும் காண இயலாது.

Koviloor Digital Library

ஜனவரி - 8

அதி : வான் சிறப்பு குறள் : 20

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுங்கு.

நீர் இல்லையென்றால் எவ்வுயிரும் இவ்வுலகில் வாழ முடியாது. மழை இல்லையெனில் மனித வாழ்க்கையில் ஒழுக்கமும் இல்லை என்று ஆகிவிடும்.

Koviloor Digital Library

ஜனவரி - 9

அதி : நீத்தார் பெருமை குறள் : 23

**இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.**

இம்மை, மறுமை இரண்டின் கூறுகளை ஆராய்ந்தறிந்து இவ்வுலகில் அறநெறியை மேற்கொண்டவரின் பெருமையே மிக உயர்ந்ததாகும்.

Koviloor Digital Library

ஜனவரி - 10

அதி : நீத்தார் பெருமை குறள் : 24

உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து.

அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன் மேலான வீடுபேறு அடைவான்.

ஜனவரி - 11

அதி : நீத்தார் பெருமை குறள் : 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

பயன் நிறைந்த மொழிகளையே பேசும் பற்றற்ற துறவியாரின் (சான்றோரின்) பெருமையை அவருடைய ஆணையாக வழங்கும் மந்திரங்களே உலகுக்கு உணர்த்தி விடும்.

Koviloor Digital Library

ஜனவரி - 12

அதி : அறன் வலியுறுத்தல் குறள் : 31

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

அறம், வீடு பேற்றையும் சுவர்க்கம் முதலிய செல்வத்தையும் தரும்; ஆதலால் மக்கள் உயிர்க்கு அறத்தைவிட நன்மை உடையது வேறு ஒன்றுமில்லை.

Kovilor Digital Library

ஜனவரி - 13

அதி : அறன் வலியுறுத்தல் குறள் : 32

அறத்தின்ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

ஒருவனுக்கு, அறத்தைச் செய்தலினும் மேம்பட்ட நன்மையைத் தருவதும் இல்லை; அதை மயக்கத்தால் மறந்து விடுதலினும் மேம்பட்ட கேடும் இல்லை.

Koviloor Digital Library

ஜனவரி - 14

அதி : அறன் வலியுறுத்தல் குறள் : 38

**வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.**

ஒருவன் அறத்தை ஒருநாளும் விடாமல் செய்வானாகில் அச்செயலானது மறுபடியும் பிறவி வராமல் தடுக்கும் கல்லாக அமையும்.

Koviloor Digital Library

ஜனவரி - 15

அதி : இல்வாழ்க்கை குறள் : 41

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை.

இல்லறத்தில் வாழ்பவன் என்பவன் அறத்தின் இயல்புடைய பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

Koviloor Digital Library

ஜனவரி - 16

அதி : இல்வாழ்க்கை குறள் : 42

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.**

துறவிகளுக்கும் வறுமையாளர்க்கும் தன்னிடம் வந்து இரந்தவர்களுக்கும், (யாசித்தவர்களுக்கும்) இல்லறம் நடத்துகின்றவன் துணையாய் இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஜனவரி - 17

அதி : இல்வாழ்க்கை குறள் : 43

**தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல்; தான்என்றுஆங்கு
ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை.**

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன் குடும்பம் என்னும் ஐந்திடத்தும் அறநெறி பேணுதல் இல்லறத்தானுடைய சிறந்த கடமையாகும்.

Koviloor Digital Library

ஜனவரி - 18

அதி : இல்வாழ்க்கை குறள் : 45

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

இல்வாழ்க்கை அன்பும், அறமும் உடையதாக விளங்கினால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

Koviloor Digital Library

ஜனவரி - 19

அதி : இல்வாழ்க்கை குறள் : 48

**ஆற்றின் ஒழுக்கி, அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.**

பிறரை அறவழியில் செலுத்தி, தானும் அவ்வழியில் சென்று வாழும் இல்லறத் தானின் வாழ்க்கை துறவற வாழ்க்கையை விடச் சாலச் சிறந்ததாகும்.

Kovilloor Digital Library

ஜனவரி - 20

அதி : இல்வாழ்க்கை குறள் : 50

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.**

உலகில் வாழ வேண்டிய அறநெறிப்படி வாழ்பவன் வானுலகத்தில் வாழும் தேவர்களுள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

Koviloor Digital Library

ஜனவரி - 21

அதி : வாழ்க்கைத் துணை நலம் குறள் : 51

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தன் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

இரக்க குணம் பொருந்தி, கணவனின் வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்து இல்லற வாழ்க்கையை நடத்துபவளே உண்மையான மனைவி ஆவாள்.

Koviloor Digital Library

ஜனவரி - 22

அதி : வாழ்க்கைத் துணை நலம் குறள் : 52

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

இல்வாழ்க்கைக்கு உரிய நற்பண்பு மனைவியிடம் இல்லையானால் ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

Koviloor Digital Library

ஜனவரி - 23

அதி : வாழ்க்கைத் துணை நலம் குறள் : 56

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண்.

கற்பு நெறியில் தன்னைக் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்துச் சோர்வு அடையாமல் வாழ்பவளே சிறந்த பெண்ணாவாள்.

Koviloor Digital Library

ஜனவரி - 24

அதி : மக்கட் பேறு குறள் : 61

**பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.**

பெறுகின்ற செல்வங்களுள், அறிவுடைய மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்ததாகப் பிற எதையும் நாம் கருதுவதில்லை.

Koviloor Digital Library

ஜனவரி - 25

அதி : மக்கட் பேறு குறள் : 63

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையால் வரும்.

தம் பொருள் என்று போற்றுவதற்கு உரியவர் தம் மக்களே யாவர். ஏனெனில் அவர்கள் செய்யும் நற்காரியங்களின் பலன் தந்தையை வந்து சேரும்.

Koviloor Digital Library

ஜனவரி - 26

அதி : மக்கட் பேறு குறள் : 66

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு இன்புறாதவரே, 'குழலின் இசை இனிது', 'யாழின் இசை இனிது' என்றெல்லாம் கூறுவர்.

Kovilooru Digital Library

ஜனவரி - 27

அதி : மக்கட் பேறு　　　　குறள் : 67

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் பெரிய உதவி யாதெனில், அவனைக் கற்றோர் அவையில் முதன்மை பெற்றவனாக இருக்கச் செய்தலேயாகும்.

Koviloor Digital Library

ஜனவரி - 28

அதி : அன்புடைமை குறள் : 71

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.**

அன்புக்கு அடைத்து வைக்கும் தாழ் ஏதேனும் உண்டோ? அன்புடையாரின் சிறிதளவு கண்ணீரே அவர் அன்பைப் பலர் அறிய வெளிப்படுத்திவிடும்.

Koviloor Digital Library

ஜனவரி - 29

அதி : அன்புடைமை குறள் : 75

அன்புஉற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

இவ்வுலகில் இன்பம் அடைந்தவர் அடையும் சிறப்பு அவர் அன்புடையவராகப் பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையின் பயன் என்பர்.

Koviloor Digital Library

ஜனவரி - 30

அதி : அன்புடைமை **குறள் : 77**

என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம்.

எலும்பு இல்லாத உடல் கொண்ட புழுக்கள் முதலியவற்றை வெயில் வருத்துவது (காய்வது) போல அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்துவார்.

Koviloor Digital Library

ஜனவரி - 31

அதி : விருந்தோம்பல் குறள் : 81

இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு.

மனைவியோடு வீட்டில் இருந்து பொருள்களைக் காப்பாற்றி வாழும் வாழ்க்கையெல்லாம் வந்த விருந்தினரை உபசரித்து அவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி

எந்தக் கனவும் – அதை நனவாக்குவதற்கான திறனோடுதான் உங்களுக்கு வழங்கப்படுகிறது...

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 1

அதி : விருந்தோம்பல் குறள் : 84

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

நல்ல விருந்தினரை முகமலர்ச்சியோடு போற்று பவனது இல்லத்தில் திருமகள் மனம் மகிழ்ந்து வாழ்வாள்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 2

அதி : விருந்தோம்பல் குறள் : 86

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துஇருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இப்பிறவியில் தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, மேலும் வரக்கூடிய விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன் மறுமையில் தேவனாய் வானுலகில் வாழும் தேவர்க்கும் நல்ல விருந்தினன் ஆவான்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 3

அதி : விருந்தோம்பல் குறள் : 88

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

விருந்தினரைப் போற்றி அவ்வேள்வி யின் பயனை அடையாத அறிவில்லாதவர், பொருளை வீணே காத்து இழந்து ஆதரவற்ற வரானோம் என்று பின்னர் வருந்துவர்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 4

அதி : இனியவை கூறல் குறள் : 92

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகமலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 5

அதி : இனியவை கூறல் குறள் : 94

துன்புறூஉம் துவ்வாமை இல்ஆகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ ல்அவர்க்கு.

யாவரிடத்திலும் இன்பத்தை மிகுவிக் கின்ற இன்சொல்லை உடையவருக்குத் துன்பத்தை மிகுவிக்கின்ற வறுமை இல்லாது ஒழியும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 6

அதி : இனியவை கூறல் குறள் : 95

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி; அல்ல மற்றுப்பிற.

வணக்கம் உடையவனாகவும், இன்சொல் கூறுவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும். பிறவெல்லாம் உண்மையான அணிகலன்கள் ஆகாது.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 7

அதி : இனியவை கூறல் குறள் : 96

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

ஒருவன் தனக்கும் பிறர்க்கும் நன்மை தரும் சொற்களை ஆராய்ந்து இனிமையாகப் பேச வல்லவனாயின் அவனுக்குப் பாவங்கள் நீங்கிப் புண்ணியம் பெருகும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 8

அதி : இனியவை கூறல் குறள் : 98

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

துன்பத்தைத் தரும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமையிலும் இம்மையிலும் சொல்பவனுக்கு இன்பத்தைத் தரும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 9

அதி : இனியவை கூறல் குறள் : 100

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய சொற்கள் இருக்கும் போது ஒருவன் கடுமையான சொற்களைக் கூறுதல், இனிய கனிகள் இருக்கும்போது காய்களைத் தின்பதைப் போன்றது.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 10

அதி : செய்ந்நன்றி அறிதல் குறள் : 101

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.**

தனக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கும் போது ஒருவன் பிறர்க்குச் செய்த உதவிக்கு இம்மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒப்பாதல் இயலாது.

Kovilooor Digital Library

ஃபிப்ரவரி - 11

அதி : செய்ந்நன்றி அறிதல் குறள் : 102

**காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.**

தக்க காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரியதாகும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 12

அதி : செய்ந்நன்றி அறிதல் குறள் : 104

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

ஒருவன் தினையளவுள்ள சிறிய உதவியைத் தமக்குச் செய்தாலும் அதன் பயன் உணர்ந்த சான்றோர் அதனைப் பனையளவு பெரிதாக மதித்துப் போற்றுவர்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 13

அதி : செய்ந்நன்றி அறிதல் குறள் : 106

மறவற்க மாசுஅற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்புஆயார் நட்பு.

குற்றமற்ற நல்லவரின் நட்பை மறத்தல் கூடாது. துன்பம் நேர்ந்த காலத்தில் தனக்கு உதவியாக இருந்தவர்களின் நட்பை எந்நாளும் கைவிடுதல் கூடாது.

Koyilor Digital Library

ஃபிப்ரவரி - 14

அதி : செய்ந்நன்றி அறிதல் குறள் : 110

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்; உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கு உயர்வே கிடையாது.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 15

அதி : நடுவு நிலைமை குறள் : 111

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பால்பட்டு ஒழுகப் பெறின்.

அறவழி நின்று பகை, நட்பு, நொதுமல் (அயலார்) ஆகிய மூவிடத்திலும் வேறுபாடு இன்றி நடத்தலே நடுவுநிலையின் பயனாகும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 16

அதி : நடுவு நிலைமை குறள் : 112

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

நடுநிலையிலிருந்து தேடி வைத்த செல்வம் இடையில் அழிந்து போகாமல் அவன் வழியினர்க்கும் உறுதியாக நன்மை தரும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 17

அதி : நடுவு நிலைமை குறள் : 113

நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

நடுநிலை தவறி ஈட்டிய பொருள் நன்மையே தருவதாக இருந்தாலும் அதை அப்போதே கைவிட வேண்டும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 18

அதி : நடுவு நிலைமை குறள் : 114

தக்கார் தகவுஇலர் என்பது அவர்அவர்
எச்சத்தால் காணப் படும்.

இவர் நடுவுநிலையுடையவர், இவர் நடுவுநிலை இல்லாதவர் என்பவற்றை அவரவருடைய மக்களைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 19

அதி : நடுவு நிலைமை குறள் : 116

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

தன் உள்ளம் நடுநிலை தவறிப் பாவத்தை நினைத்தால் அது பின்னர் வரப்போகும் தீமைக்கு அறிகுறி என்று அறிய வேண்டும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 20

அதி : அடக்கமுடைமை   குறள் : 121

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் ஒருவனாகச் சேர்க்கும். அடக்கம் இல்லாதிருத்தல் பேரிருள் ஆகிய நரகத்தில் சேர்த்துவிடும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 21

அதி : அடக்கமுடைமை குறள் : 124

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

எத்தகைய சூழ்நிலையிலும் அறநெறியி லிருந்து மாறுபடாமல் அடக்கமுடைய வனாய் வாழ்பவனது உயர்வு மலையின் உயர்வைவிட மேலானது.

Kovlloor Digital Library

ஃபிப்ரவரி - 22

அதி : அடக்கமுடைமை குறள் : 126

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பில் ஒருவன், ஆமை தன் ஐந்து உறுப்புகளையும் ஓட்டினுள் அடக்கிக் கொள்வதைப் போலப் பாவம் சேராமல் ஐம்பொறிகளையும் அடக்கி ஆளவல்லவனாயின் அது அவனுக்கு ஏழு பிறப்பு களுக்கும் காவலாய் உதவும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 23

அதி : அடக்கமுடைமை குறள் : 127

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கி ஆளவேண்டும். அங்ஙனம் அடக்கியாளாவிட்டால் பேசும் போது சொற்குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப்படுவர்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 24

அதி : அடக்கமுடைமை குறள் : 128

ஒன்றானும் தீச்சொல் பொருள்பயன் உண்டாயின்
நன்றாகாது ஆகி விடும்.

தீய சொல்லைச் சொல்லிப் பிறர் மனதைப் புண்படுத்துபவன் செய்யும் நல்ல காரியங்கள்கூட மாறுபட்ட பயனைத் தரும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 25

அதி : அடக்கமுடைமை குறள் : 129

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.**

தீயினால் சுடப்பட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடுவானது ஒரு போதும் மறையாது.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 26

அதி : ஒழுக்கமுடைமை குறள் : 131

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.**

ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதால், அந்த ஒழுக்கமே உயிரினும் மேலானதாகப் போற்றப் படுகிறது.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 27

அதி : ஒழுக்கமுடைமை குறள் : 133

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடையவராக இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகிவிடும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 28

அதி : ஒழுக்கமுடைமை குறள் : 139

**ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.**

மறந்தும் தீமையான சொற்களைத் தம் வாயினால் கூறுதலாகிய செயல்கள் நல்லொழுக்கம் உடையவர்க்கு இயலாதனவாகும்.

Koviloor Digital Library

ஃபிப்ரவரி - 29

அதி : ஒழுக்கமுடைமை குறள் : 140

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவுஇலா தார்.

உலகிலுள்ள உயர்ந்தவர்களோடு ஒத்து ஒழுகுதலை அறியாதவர்கள் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரேயாவர்.

Koviloor Digital Library

மார்ச்

இன்னும் ஓரடிகூட எடுத்துவைக்காமல் உங்கள் காலடிகளை வழிநடத்தும்படி கடவுளிடம் வேண்டி நிற்காதீர்கள்.

Kovilloor Digital Library

மார்ச் - 1

அதி : பிறன்இல் விழையாமை குறள் : 141

பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

அயலான் மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இருக்காது.

Koviloor Digital Library

மார்ச் - 2

அதி : பிறன்இல் விழையாமை குறள் : 144

**எனைத்துணையர் ஆயினும் என்ஆம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.**

தினையளவும் ஆராய்ந்து பார்க்காமல் பிறருடைய மனைவியிடம் செல்லுதல் எவ்வளவு சிறப்புடையவர் ஆயினும் அவர்க்கு இழிவைத் தருவதன்றி வேறு என்னவாக முடியும்?

Koviloor Digital Library

மார்ச் - 3

அதி : பிறன்இல் விழையாமை குறள் : 146

**பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.**

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியை நாடிச் செல்பவனிட மிருந்து என்றும் நீங்காமல் இருக்கும்.

Koviloor Digital Library

மார்ச் - 4

அதி : பொறையுடைமை குறள் : 151

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னைத் தோண்டுகின்றவர்களையும் விழாமல் தாங்கும் நிலத்தைப் போலத் தம்மை இகழ்ந்து பேசுபவர்களையும் பொறுத்து ஆதரித்தலே முதன்மையான அறமாகும்.

Koviloor Digital Library

மார்ச் - 5

அதி : பொறையுடைமை குறள் : 153

இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

வறுமையுள் வறுமையாவது விருந்தினரைப் பேணாமல் நீங்குதல், அதுபோல, வல்லமையுள் வல்லமையாவது அறியாமையால் தீங்கு செய்தவரைப் பொறுத்தல் என்பதாம்.

Kovilur Digital Library

மார்ச் - 6

அதி : பொறையுடைமை குறள் : 155

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

தங்களுக்குத் தீமை செய்தவரைத் தண்டிப்பவரை உலகம் மதிக்காது; தீமையைப் பொறுத்துக் கொண்டவரையே பொன்போல் மதித்துப் போற்றும்.

Koviloor Digital Library

மார்ச் - 7

அதி : பொறையுடைமை குறள் : 156

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.**

தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவர்க்கு ஒரு நாளைய இன்பமும், அத்தீமையைப் பொறுத்தவருக்கு உலகம் அழியும் அளவும் புகழும் உண்டாகும்.

Koviloor Digital Library

மார்ச் - 8

அதி : பொறையுடைமை குறள் : 160

உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

அயலார் தம்மைப் பற்றிக் கூறும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவருக்கு, பட்டினிக் கிடந்து தவம் புரியும் துறவிகள்கூட ஈடாக மாட்டார்கள்.

Koviloor Digital Library

மார்ச் - 9

அதி : அழுக்காறாமை குறள் : 162

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

ஒருவன் எவரிடத்திலும் பொறாமை கொள்ளாத பெருந்தன்மை பெறுவானாயின், அவனுக்கு அதைவிடச் சிறந்த பேறு வேறு ஒன்றும் இல்லை.

Koviloor Digital Library

மார்ச் - 10

அதி : அழுக்காறாமை குறள் : 163

**அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.**

பிறரது செல்வத்தைக் கண்டு மகிழ்ச்சியடையாமல் அதற்காகப் பொறாமைப்படுபவன் அறத்தையும் செல்வத்தையும் இழந்தவனாவான்.

Koviloor Digital Library

மார்ச் - 11

அதி : அழுக்காறாமை குறள் : 166

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப் பதைக் குறித்துப் பொறாமைப்படுபவரது உறவினர்கூட உடுக்க உடையும் உண்ண உணவும் இல்லாமல் அழிவர்.

Koviloor Digital Library

மார்ச் - 12

அதி : அழுக்காறாமை குறள் : 168

**அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.**

பொறாமை என்னும் பாவ குணம் தன்னைக் கொண்டுள்ளவரை இம்மையில் செல்வத்தை அழித்து மறுமையில் அவரைத் தீய வழியில் சேர்த்துவிடும்.

Koviloor Digital Library

மார்ச் - 13

அதி : வெஃகாமை குறள் : 171

நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

நடுவு நிலைமை இல்லாமல் பிறர் பொருளை அபகரிக்க விரும்பினால், அவ்விருப்பம், அவனது குடியைக் கெடுத்து,பல தீமைகளையும் அப்போதே கொடுக்கும்.

Koviloor Digital Library

மார்ச் - 14

அதி : வெஃகாமை **குறள் : 175**

அஃகி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பிறர் பொருளை கவர எண்ணி, அறிவுக்கு ஒவ்வாத செயல்களைச் செய்பவர், எவ்வளவு நுட்பமான அறிவு உடையவராய் இருந்தாலும் அவ்வறிவால் ஒரு பயனும் இல்லை.

Koviloor Digital Library

மார்ச் - 15

அதி : வெஃகாமை குறள் : 178

அஃகாமை செல்வத்திற்கு யாதுஎனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

உன்னுடைய செல்வம் குறையாதிருக்க நீ விரும்பினால், பிறர் பொருளைக் கவர விரும்பாதே.

Koviloor Digital Library

மார்ச் - 16

அதி : வெஃகாமை குறள் : 179

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.

பிறர் பொருளை விரும்பாதிருத்தலே அறம் என்று கருதி ஒழுகும் அறிவுடையாரைச் சேர்தற்குரிய உபாயத்தை அறிந்து திருமகள் தானே சென்றடைவாள்.

Koviloor Digital Library

மார்ச் - 17

அதி : புறங்கூறாமை குறள் : 181

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

அறநெறிகளைப் போற்றாதவனாகவும், அறச்செயல்களைச் செய்யாதவனாகவும் இருந்தாலும் புறம் கூறாதவன் என்று வாழ்வது நல்லது.

Koviloor Digital Library

மார்ச் - 18

அதி : புறங்கூறாமை **குறள் : 183**

**புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.**

ஒருவனைக் காணாத போது இகழ்ந்து பேசி அவனைக் கண்ட போது அவனிடம் அன்புடையவன் போலப் பொய்யாக நடித்து வாழ்வதைக் காட்டிலும் இறத்தலே அறநூல் வழியாகும்.

Kovlioor Digital Library

மார்ச் - 19

அதி : புறங்கூறாமை குறள் : 186

பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறரது குற்றத்தை அவனைக் காணாதவிடத்துச் சொல்லுபவன், பிறரால் அவனுடைய குற்றங்கள் எடுத்துரைக்கப் பட்டு, பழிக்கப்படுவான்.

Koviloor Digital Library

மார்ச் - 20

அதி : பயன்இல சொல்லாமை குறள் : 192

பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

பயனில்லாத சொற்களைப் பலர் முன் சொல்லுதல், நண்பரிடத்து வெறுக்கப்படும் செயல்களைச் செய்தலினும் தீயதாகும்.

மார்ச் - 21

அதி : பயன்இல சொல்லாமை குறள் : 195

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.

நற்குணமுடையார் பயனற்ற சொற்களைச் சொல்வாராயின், அதனால் அவரது மேன்மையும், நன்மதிப்பும் அவரை விட்டு நீங்கும்.

Koviloor Digital Library

மார்ச் - 22

அதி : பயன்இல சொல்லாமை **குறள் : 198**

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

சிறந்த பயன்களை ஆராயும் அறிவினையுடையவர், பெரிய ப்யன் தருதல் இல்லாத சொற்களைப் பேசவே மாட்டார்கள்.

Koviloor Digital Library

மார்ச் - 23

அதி : தீவினை அச்சம் குறள் : 201

தீவினையார் அஞ்சார் விழுமியர் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

தீய செயல்கள் தீமையை விளைவிக்கும். ஆகவே அவை தீயை விடக் கொடுமையானவையாகக் கருதி அஞ்சப்பட வேண்டியவை.

Koviloor Digital Library

மார்ச் - 24

அதி : தீவினை அச்சம் குறள் : 202

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தனக்கு இன்பம் தரும் என்று எண்ணி ஒருவன் செய்யும் தீய செயல்கள் பின் தீமை யே தருதலால் அத்தகைய தீய செயல்கள் நெருப்பைக் காட்டிலும் கொடியன என்று அஞ்சி அவற்றை விலக்க வேண்டும்.

Koviloor Digital Library

மார்ச் - 25

அதி : தீவினை அச்சம் குறள் : 203

அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

தமக்குத் தீங்கு செய்தவருக்கும் தாம் பதிலுக்குத் தீங்கு செய்யாமல் இருத்தலை அறிவினுள் எல்லாம் தலைசிறந்த அறிவு என்று கூறுவர்.

Koviloor Digital Library

மார்ச் - 26

அதி : தீவினை அச்சம் குறள் : 204

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறனுக்குத் தீங்கு தரும் செயல்களை மறந்தும் நினைக்கக் கூடாது. நினைத்தால் அப்படி நினைத்தவனுக்குக் கேடு செய்ய அறம் நினைக்கும்.

Koviloor Digital Library

மார்ச் - 27

அதி : ஒப்புரவு அறிதல் குறள் : 211

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு?

மழைக்கு இவ்வுலகம் என்ன கைம்மாறு செய்யக் கூடும்? மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை.

Koviloor Digital Library

மார்ச் - 28

அதி : ஒப்புரவு அறிதல் குறள் : 213

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும், பிறர்க்கு உபகாரம் செய்வதைப் போல நல்லனவாகிய வேறு செயல்களைப் பெறுதல் அரிதாம்.

Koviloor Digital Library

மார்ச் - 29

அதி : ஒப்புரவு அறிதல் குறள் : 215

ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு.

உலக நன்மையை விரும்பிச் செய்கின்ற பேரறிவாளன் பெற்ற செல்வம் ஊரார் நீருண்ணும் குளம் நீர் நிறைந்தாற் போன்று பலருக்கும் பயன்படும். (பேரறிவாளன் : உண்மையான அறிவு பெற்றவன்)

Kovilloor Digital Library

மார்ச் - 30

அதி : ஒப்புரவு அறிதல் குறள் : 216

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

உபகாரம் செய்பவனிடத்தில் செல்வம் சேருமானால் அது ஊரின் நடுவில் எல்லார்க்கும் பயன் தரக்கூடிய மரம், பழம் பழுத்தாற்போல யாவர்க்கும் பயன்படும்.

Koviloor Digital Library

மார்ச் - 31

அதி : ஈகை குறள் : 221

வறியார்க்குஒன்று ஈவதே ஈகை; மற்றுஎல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து.

வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். பிறருக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துத் தருவது ஆகும்.

Koviloor Digital Library

ஏப்ரல்

காத்துக்கிடக்கிறது மிகப் பெரிய வாய்ப்பு உங்கள் காலடியில்!

நீங்கள் தற்போது பார்க்கிற வேலையில், உங்கள் தொழிலில், கல்வியில், அனுபவத்தில், ஆர்வங்களில்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 1

அதி : ஈகை குறள் : 226

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

ஏழைகளின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடம் ஆகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 2

அதி : ஈகை குறள் : 227

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

பலரோடும் பகுத்துண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்னும் தீய நோய் அணுகுதல் இல்லை.

Koviloor Digital Library

ஏப்ரல் - 3

அதி : ஈகை குறள் : 228

ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வண் கணவர்.

தாம் சேர்த்துள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் இரக்கமில்லாதவர்கள், பிறர்க்குக் கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறிய மாட்டார்கள்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 4

அதி : புகழ் குறள் : 231

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

வறியவர்க்குப் பொருள் ஈதல் வேண்டும். அதனால் புகழுண்டாக வாழ வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியம் (பயன்) வேறு யாதும் இல்லை.

Kovilloor Digital Library

ஏப்ரல் - 5

அதி : புகழ் குறள் : 233

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.**

நெடுநாள் நீடித்து நிலைக்கும் புகழுக்கு ஒப்பான ஒரு பொருளை உலகில் காண்பது மிகவும் அரிதாகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 6

அதி : புகழ் **குறள் : 240**

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

இவ்வுலகில் பழியில்லாமல் புகழுடன் வாழ்பவரே உயிர் வாழ்பவராக மதிக்கப்படுவார். புகழ் இல்லாமல் பழியோடு வாழ்பவர் இறந்தவருக்குச் சமமாகவே மதிக்கப்படுவர்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 7

அதி : அருளுடைமை குறள் : 243

**அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.**

எல்லா உயிர்களிடத்திலும் இரக்கம் காட்டுகிற அருள் நிரம்பியவர்கள் இருள் சூழ்ந்த கொடிய நரகத்தை அடைய மாட்டார்கள்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 8

அதி : அருளுடைமை குறள் : 244

மன்உயிர் ஓம்பி அருள்ஆள்வார்க்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை.

உயிரினங்களைக் காத்து அவற்றிடம் இரக்கம் காட்டி வாழ்பவனுக்குத் தன் உயிரைக் குறித்து அஞ்சுகின்ற தீவினைகள் இல்லை.

Koviloor Digital Library

ஏப்ரல் - 9

அதி : அருளுடைமை குறள் : 245

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள்இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவருக்கு இவ்வுலகில் இன்பமான வாழ்க்கை இல்லாதது போல, அருள் இல்லாதவர்க்கு மேல் உலகத்து வாழ்வும் இல்லையாம்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 10

அதி : புலால் மறுத்தல் குறள் : 251

**தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.**

தன் உடலைப் பெரிதாய் வளர்ப்பதற்காகத் தான் பிறிதோர் உயிரின் தசையைத் தின்கின்றவன் எவ்வாறு இரக்கமுள்ளவனாக இருக்கமுடியும்?

Kovilur Digital Library

ஏப்ரல் - 11

அதி : புலால் மறுத்தல் குறள் : 252

**பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.**

பொருளுடையவராக இருக்கும் தகுதி அப்பொருளைக் காப்பாற்றாதவருக்கு இல்லை. அவ்வாறே அருள் உடையவராகும் தகுதி ஊனைத் தின்பவருக்கு இல்லை.

Koviloor Digital Library

ஏப்ரல் - 12

அதி : புலால் மறுத்தல் குறள் : 253

**படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.**

ஓர் உயிரின் உடலைச் சுவையாக உண்டவரின் மனம் கொலைக் கருவியைக் கையில் கொண்டவரின் நெஞ்சம் போல் இரக்கமற்றுக் காணப்படும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 13

அதி : புலால் மறுத்தல் குறள் : 255

உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

புலால் உண்ணும் பழக்கம் பெருகிக் கொண்டே போனால் பிராணிகள் உயிரோடு வாழும் நிலையே அரிதாகி விடும். ஊன் உண்டால் நரகம் அவனை வெளியே விடாது.

Koviloor Digital Library

ஏப்ரல் - 14

அதி : புலால் மறுத்தல் குறள் : 257

**உண்ணாமை வேண்டும் புலாஅல்; பிறிதுஒன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்.**

ஆராய்ந்து பார்த்தால் புலால் என்பது உயிரினங்களின் புண் என்பது நன்கு புலனாகும். இதை உணர்ந்து புலாலை உண்ணலாகாது.

Koviloor Digital Library

ஏப்ரல் - 15

அதி : புலால் மறுத்தல் குறள் : 259

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.**

பல வேள்விகளைச் செய்வதால் கிடைக்கும் பலனை விட, புலால் உண்ணுதலைக் கைவிடுவதால் வரும் பலன் மிகவும் உயர்ந்ததாகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 16

அதி : புலால் மறுத்தல் குறள் : 260

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.**

கொலை செய்யாமலும், புலால் உண்ணாமலும் வாழும் உயர்ந்த பண்பாளனை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

Kovilor Digital Library

ஏப்ரல் - 17

அதி : தவம் குறள் : 261

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.**

தனக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தலும், மற்ற உயிருக்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய இவையே தவத்திற்கு இலக்கணமாகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 18

அதி : தவம் குறள் : 267

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.

புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப் போல் தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த, வருத்த மெய்யுணர்வு மிகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 19

அதி : தவம் **குறள் : 269**

கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

தவத்தின் மூலமாக ஆத்ம வலிமை பெற்றவர்களுக்கு யமனை வெல்லுதலும் கைகூடும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 20

அதி : கூடா ஒழுக்கம் குறள் : 274

தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் துஅற்று.

தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவமல்லாத வற்றைச் செய்ய விரும்புதல் வேடன் புதரில் மறைந்து பறவைகளைப் பிடிப்பதற்குச் சமமாகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 21

அதி : கூடா ஒழுக்கம் குறள் : 279

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் குஅன்ன
வினைபடு பாலால் கொளல்.

நேராகத் தோன்றினாலும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு இன்னிசை தரக்கூடியது. ஆகவே, மக்களின் பண்புகளைச் செயல்வகையால் அறிதல் வேண்டும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 22

அதி : கூடா ஒழுக்கம் குறள் : 280

மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

உலகம் பழிக்கும் தீய செயல்களை விட்டு விட்டால், மொட்டை அடித்தலும் சடைவளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டாம்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 23

அதி : கள்ளாமை குறள் : 281

**எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**

பிறரிடம் பழிச்சொல் கேட்காமல் உலகில் வாழ விரும்புகிறவன், பிறர் பொருளைக் கவரும் எண்ணம் உள்ளத்தில் தோன்றாதவாறு தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 24

அதி : கள்ளாமை குறள் : 283

களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

களவால் வரும் பிறர் செல்வம் பெருகுவது போல் தோன்றி, கடைசியில் உள்ளதையும் சேர்த்து அழித்துவிடும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 25

அதி : கள்ளாமை **குறள் : 289**

அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவுஅல்ல
மற்றைய தேற்றா தவர்.

களவைத் தவிர வேறு நல்ல வழிகளைத் தெரியாதவர்கள், அளவற்ற செலவுகளைச் செய்து அழிவர்.

ஏப்ரல் - 26

அதி : வாய்மை குறள் : 291

**வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல்.**

உண்மையென்று கூறப்படுவது எது என்றால், மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுதலேயாகும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 27

அதி : வாய்மை **குறள் : 293**

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

ஒருவன் தன் மனம் அறிந்த ஒன்றைப் பிறர் அறியார் என மறைத்துப் பொய் கூறுதல் கூடாது. அங்ஙனம் பொய் கூறு வானாயின் அவன் மனமே அக்குற்றத்திற்குச் சாட்சியாய் இருந்து அவனை வருத்தும்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 28

அதி : வாய்மை **குறள் : 295**

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.

ஒருவன் தன் மனத்தோடு பொருந்தி, உண்மையையே பேசுவானாயின் தவமும் தானமும் ஒருங்கே செய்பவர்களைக் காட்டிலும் சிறந்தவனாவான்.

Koviloor Digital Library

ஏப்ரல் - 29

அதி : வாய்மை குறள் : 296

பொய்யாமை அன்ன புகழ்இல்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்.

பொய்யாமை போலப் புகழ் தருவது வேறு இல்லை. அதில் தளராமல் உறுதியாய் இருப்பது, ஒருவனுக்கு எல்லா அறத்தின் சிறப்பையும் தரும்.

Koyilmo Digital Library

ஏப்ரல் - 30

அதி : வாய்மை **குறள் : 297**

பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொய் கூறாமை என்னும் நன்மையையே ஒருவன் இடைவிடாமல் செய்து வருவானாயின் அவன் வேறு அறங்களைச் செய்ய வேண்டாம்.

Koviloor Digital Library

மே

அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்வதைவிட வலி அளிப்பது ஒன்றே ஒன்று மட்டுந்தான். அது – அனுபவத்தில் இருந்து கற்றுக் கொள்ளாமல் இருப்பது.

Koviloor Digital Library

மே - 1

அதி : வாய்மை குறள் : 299

எல்லா விளக்கும் விளக்குஅல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

அறிவு ஒழுக்கம் நிறைந்த பெரியவர் களுக்குப் புற இருளைப் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல; பொய் கூறாமல் உண்மை பேசுதலாகிய விளக்கே சிறந்த விளக்காகும்.

Kovilloor Digital Library

மே - 2

அதி : வெகுளாமை குறள் : 303

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்.

யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் மறந்துவிட வேண்டும். சினத்தால் தீமையான விளைவுகளே ஏற்படும்.

Koviloor Digital Library

மே - 3

அதி : வெகுளாமை **குறள் : 304**

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைக் காட்டிலும் வேறு பகை இல்லை!

Koviloor Digital Library

மே - 4

அதி : வெகுளாமை குறள் : 305

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவன் துன்பம் நேராமல் தன்னைக் காத்துக் கொள்ள நினைப்பான் ஆயின் கோபம் வராமல் அதனை அடக்கி ஆள வேண்டும். அங்ஙனம் கோபத்தை அடக்கா விட்டால் அக்கோபம் அவனையே அழித்து விடும்.

Koviloor Digital Library

மே - 5

அதி : வெகுளாமை குறள் : 306

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

கோபமாகிய கொடிய நெருப்பு சினமுற்றோரையே அழிப்பதோடு, அவர் வீடுபேறு அடையத்தக்க வழிகளையும் அடைத்துவிடும்.

Koviloor Digital Library

மே - 6

அதி : இன்னா செய்யாமை குறள் : 311

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

சிறப்பைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.

Koviloor Digital Library

மே - 7

அதி : இன்னா செய்யாமை குறள் : 314

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தல் என்பது அத்துன்பம் செய்தவர் தாமே வெட்கப்படுமாறு அவருக்கு நன்மை செய்து, அவர் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலேயாகும்.

Koviloor Digital Library

மே - 8

அதி : இன்னா செய்யாமை குறள் : 317

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.**

எங்கும் எப்போதும், துயரத்தைத் தரும் காரியத்தைச் சிறிதளவும் மனம் அறிந்து செய்யலாகாது. அதுவே சிறந்த அறமாகும்.

Koviloor Digital Library

மே - 8

அதி : இன்னா செய்யாமை குறள் : 319

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒரு நாளின் முற்பகலில் ஒருவருக்குத் தீங்கு செய்தால், செய்தவருக்குத் தீங்குகள் அன்று பிற்பகலுக்குள் தாமாகவே வந்து சேரும்.

Koviloor Digital Library

மே - 10

அதி : இன்னா செய்யாமை குறள் : 320

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர்.

பிற உயிர்களுக்குத் துன்பம் செய்ப வரையே துன்பம் வந்தடையும். ஆதலால் துன்பம் இல்லாமல் வாழ விரும்புபவர், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்தல் கூடாது.

Kovilloor Digital Library

மே - 11

அதி : கொல்லாமை குறள் : 321

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறச்செயல் எது என்றால் எந்த ஓர் உயிரையும் கொல்லாத செயலே. அவ்வாறு கொல்லுதல் பிற தீவினைகளை எல்லாம் தானே கொண்டு வரும்.

Koviloor Digital Library

மே - 12

அதி : கொல்லாமை குறள் : 322

**பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.**

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்து, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல், அற நூலோர் தொகுத்துக் கூறிய அறங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய அறமாகும்.

Kovilloor Digital Library

மே - 13

அதி : கொல்லாமை **குறள் : 324**

நல்லாறு எனப்படுவது யாதுஎனின், யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

நல்லொழுக்கம் எனப்படுவது யாதெனில், எந்த ஓர் உயிரையும் கொல்லாத ஆற்றலைப் போற்றும் நெறியாகும்.

Koviloor Digital Library

மே - 14

அதி : கொல்லாமை குறள் : 327

தன்உயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

உயிரினங்கள் மூலம் தனக்கு மரண பயம் வந்தாலும், தன்னைக் காத்துக் கொள் வதற்காக உயிர்களைக் கொல்லலாகாது.

Koviloor Digital Library

மே - 15

அதி : நிலையாமை குறள் : 332

**கூத்துஆட்டு அவைக்குழாத்து அற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் துஅற்று.**

பெருஞ் செல்வம் வந்து சேர்தல் கூத்தாடுமிடத்தில் கூட்டம் வந்து கூடுவதைப் போன்றது. அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

Koviloor Digital Library

மே - 16

அதி : நிலையாமை குறள் : 335

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

மேல் மூச்சு, நாக்குத் தழுதழுத்தல் போன்ற மரண உபாதைகள் வருவதற்கு முன்னே வேகமாக நற்கதி பெற நல்லறம் செய்யவேண்டும்.

Koviloor Digital Library

மே - 17

அதி : நிலையாமை குறள் : 337

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

அறிவற்றவர் ஒரு வேளையாவது வாழ்க்கையின் தன்மையை ஆராய்ந்து அறிவதில்லை. ஆனால் வீணில் எண்ணும் அளவோ ஒரு கோடியும் அல்ல; மிக்க பலவாகும்.

Koviloor Digital Library

மே - 18

அதி : துறவு குறள் : 341

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எந்தெந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

Koviloor Digital Library

மே - 19

அதி : துறவு குறள் : 342

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

துன்பம் இல்லாத வாழ்க்கையை விரும்பினால், ஆசைகளையெல்லாம் விட்டு விட வேண்டும். அப்படி விட்டுவிட்ட பின் இவ்வுலகில் அடையக் கூடிய இன்பங்கள் பலவாகும்.

Koviloor Digital Library

மே - 20

அதி : துறவு குறள் : 350

**பற்றுக பற்றுஅற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.**

பற்று இல்லாதவனாகிய இறைவனது பற்றை மட்டுமே பற்றுக. உலகப் பற்றுக்களை விடுவதற்கு அப்பற்றைப் பற்ற வேண்டும்.

Koviloor Digital Library

மே - 21

அதி : மெய் உணர்தல் குறள் : 355

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எப்பொருள் எத்தன்மையதாகத் தோன்றி னாலும், அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல் அப்பொருளின் மெய்யான இயல்பைத் தெளிவாகக் காண்பதே அறிவாகும்.

Koviloor Digital Library

மே - 22

அதி : மெய் உணர்தல் குறள் : 356

கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி.

கற்க வேண்டியவற்றைக் கற்று மெய்ப் பொருளையும் அறிந்தவர் மீண்டும் இப்பிறப்பிற்கு வாராத வழியை அடைவர்.

மே - 23

அதி : மெய் உணர்தல் குறள் : 358

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.**

பிறவித் துயரைத் தரும் அஞ்ஞானம் அகல, முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு ஆகும்.

Koviloor Digital Library

மே - 24

அதி : மெய் உணர்தல் குறள் : 360

**காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.**

விருப்பு, வெறுப்பு, அறியாமை ஆகிய இக்குற்றங்கள் மூன்றனுடைய பாதிப்பு இல்லாமல் ஒழுகினால் துன்பங்கள் வாராமல் கெடும் (ஒழிந்து நீங்கும்).

Koviloor Digital Library

மே - 25

அதி : அவா அறுத்தல் குறள் : 363

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை
யாண்டும் அஃதுஒப்பது இல்.

ஆசையின்மைக்குச் சமமான சிறந்த பொருள் இவ்வுலகில் இல்லை. மறு உலகிலும் அதற்குச் சமமானதொரு பொருளைக் காண்பதரிது.

Koviloor Digital Library

மே - 26

அதி : அவா அறுத்தல் குறள் : 365

அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்
அற்றாக அற்றது இலர்.

எதிலும் பற்றில்லாதவர்கள் பிறவியற் றவர்களாவர். ஆசைக்கு அடிமையானவர் களுக்குப் பிறவியிலிருந்து விடுதலை இல்லை.

Kovitoor Digital Library

மே - 27

அதி : அவா அறுத்தல் குறள் : 367

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றின் வரும்.

ஒருவன் ஆசையை முற்றும் ஒழித்தால், அவன் கெடாமல் வாழ்வதற்குரிய நல்வினைகள் தான் விரும்பியவாறே வரும்.

Koviloor Digital Library

மே - 28

அதி : அவா அறுத்தல் குறள் : 368

**அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃதுஉண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.**

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் இல்லை. அவா இருந்தால் துன்பமும் விடாமல் வந்துகொண்டே இருக்கும்.

Koviloor Digital Library

மே - 29

அதி : ஊழ் குறள் : 371

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

செல்வம் வருவதற்குத் தேவையான விதி வரும்போது, முயற்சி தானாக உண்டாகும். அது அழிய வேண்டிய நேரம் வருமாயின் சோம்பல் வளரும்.

Koviloor Digital Library

மே - 30

அதி : ஊழ் குறள் : 372

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை.

செல்வம் அழிய வேண்டிய காலம் வந்தால் அறிவாளிக்கும் மதி மயக்கம் ஏற்படும். செல்வம் வர வேண்டிய காலம் வந்தால் மூடனுக்கும் நல்லுணர்வு ஏற்படும்.

Koviloor Digital Library

மே - 31

அதி : ஊழ் குறள் : 373

**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.**

நுட்பமான பல நூல்களை முயன்று கற்றாலும் ஊழிற்கு ஏற்றவாறு அவனுடைய சொந்த அறிவே மேம்பட்டுத் (அந்நேரம் நல்லதாக) தோன்றும்.

Koviloor Digital Library

ஜூன்

ரோஜாவில் முள் இருக்கிறதே என்று குறைபட்டுக் கொள்ளாதீர்கள். முட்களின் நடுவே ரோஜா மலர்ந்திருப்பதற்காக மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

Koyil.org Digital Library

ஜூன் - 1

அதி : ஊழ் **குறள் : 376**

பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

விதி சாதகமாக இல்லையென்றால் காக்கப்பட்ட பொருளும் நழுவிப் போய் விடும். விதி சாதகமாக இருந்தால் காக்கப்படாத பொருளும் அழியாமல் இருக்கும்.

Koviloor Digital Library

ஜூன் - 2

அதி : ஊழ் குறள் : 377

வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

கோடிக்கணக்கான செல்வத்தை ஒருவன் முயன்று சேர்த்து வைத்தாலும், விதி இருந்தால்தான் அவனால் அதை அனுபவிக்க முடியும்.

Koviloor Digital Library

ஜூன் - 3

அதி : ஊழ் குறள் : 378

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உடற்பால
ஊட்டா கழியும் எனின்.

மேலான செல்வம் இருந்தும் தீவினைக்கு உள்ளானவர்கள் இன்பம் பெறாமல், துறவறத்தை நாடிச் செல்வர்.

Koviloor Digital Library

ஜுன் - 4

அதி : ஊழ் குறள் : 380

**ஊழின் பெருவலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந் துஉறும்.**

விதியைப் போல் வலிவுள்ள ஒரு பொருள் உலகில் வேறு இல்லை. அவ்விதி மனிதனுடைய முயற்சிகளை யெல்லாம் அழித்து, தான் ஒன்றே முடிவில் வெல்கிறது.

Koviloor Digital Library

ஜுன் - 5

அதி : இறைமாட்சி குறள் : 383

தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

நாட்டை ஆளும் அரசனுக்கு ஒரு செயலைச் செய்வதில் காலம் தாழ்த்தாமை, கல்வி, துணிவு ஆகிய மூன்றும் எப்போதும் நீங்காமல் இயல்பாக இருத்தல் வேண்டும்.

Koviloor Digital Library

ஜூன் - 6

அதி : இறைமாட்சி குறள் : 387

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டுஅனைத்துஇவ் உலகு.

இனிமையான சொல்லோடு, துன்புறு வோர்க்கு வேண்டியதைக் கொடுத்துத் காப்பாற்ற வல்ல அரசன் தன் மனத்தில் கருதியவாறே உலகமும் அமையும்.

Kovíloor Digital Library

ஜூன் - 7

அதி : இறைமாட்சி குறள் : 389

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

அமைச்சர் முதலியோர் கூறும் உறுதிப் பொருள்கள் வெறுப்பாயிருந்தாலும் அவற்றின் பயன் கருதி அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் நற்பண்புடைய வேந்தனது குடை நிழலில் உலகமே தங்கும்.

Koviloor Digital Library

ஜுன் - 8

அதி : கல்வி குறள் : 393

கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

கல்வி கற்றாரே உண்மையில் கண்களையுடைய வர்கள் என்று உயர்த்திச் சொல்லப்படுவர். கல்லாதவர்கள் முகத்தில் புண்கள் இரண்டு உடையவராக இழித்துக் கூறப்படுவர்.

Koviloor Digital Library

ஜுன் - 9

அதி : கல்வி குறள் : 394

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

பலரும் மகிழுமாறு அவர்களுடன் கூடிப் பழகி, பின்னர் இவரை இனி எப்போது காண்போமோ என்று அவர்கள் எண்ணி ஏங்குமாறு அவர்களை விட்டுப் பிரிதலே கற்றறிந்த புலவர் தொழிலாகும்.

Koviloor Digital Library

ஜூன் - 10

அதி : கல்வி குறள் : 396

**தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.**

மணற்பாங்கான இடத்தில் உள்ள கிணற்று நீர், தோண்டும் அளவுக்கு ஏற்பச் சுரக்கும். அதுபோல மக்களுக்கு அவர்கள் கற்ற கல்வியின் அளவுக்கு ஏற்ப அறிவு வளரும்.

Kovilboor Digital Library

ஜூன் - 11

அதி : கல்வி குறள் : 397

யாதானும் நாடாமால், ஊர்ஆமால், என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

கற்றவனுக்கு எந்த நாடும் சொந்த நாடாகும்; எந்த ஊரும் சொந்த ஊராகும். அப்படியிருக்க ஒருவன் சாகும் வரைக்கும் கல்லாமல் இருப்பது எதனால்?

 Koviloor Digital Library

ஜூன் - 12

அதி : கல்வி குறள் : 398

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒருவனுக்கு அவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி யானது அப்பிறவியோடு போகாது. ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து சென்று உதவும் இயல்பு உடையதாகும்.

Koviloor Digital Library

ஜூன் - 13

அதி : கல்வி **குறள் : 400**

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே யாகும். ஏனைய மணி,பொன் முதலிய செல்வங்கள் அழியக்கூடியன. ஆதலால் அவை செல்வங்கள் ஆகா.

Koviloor Digital Library

ஜூன் - 14

அதி : கல்லாமை குறள் : 401

அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

நிரம்பிய நூல் அறிவு இல்லாமல் ஒருவன் அறிவுடையோர் சபையில் சென்று பேசுதல், அரங்கம் இல்லாமல் வட்டாடுதல் போன்றதற்கு ஒப்பாகும்.

Koviloor Digital Library

ஜுன் - 15

அதி : கல்லாமை **குறள் : 405**

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.**

கல்லாத ஒருவன், தன்னைக் கற்றவன் போல மதித்துக் கொண்டு பேசினால் அவனுக்கு இயல்பாக உள்ள மதிப்பும் கெட்டுப் போகும்.

Koviloor Digital Library

ஜூன் - 16

அதி : கல்லாமை குறள் : 407

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.**

நுட்பமான நூல்களைக் கல்லாதவன் பெற்ற உடலழகு, மண்ணால் மாட்சிமைப் படச் செய்யப்பட்ட பதுமையின் அழகு போன்றதாம்.

Kovilloor Digital Library

ஜூன் - 17

அதி : கேள்வி **குறள் : 411**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

கேள்விச் செல்வமே மற்றைய எல்லாச் செல்வங்களினும் உயர்வானது. ஆதலால் ஒருவனுக்குச் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வம் காதால் கேட்டறியும் கேள்விச் செல்வமேயாகும்.

Koviloor Digital Library

ஜூன் - 18

அதி : கேள்வி குறள் : 414

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

ஒருவன் சிறந்த நூல்களைக் கல்லாத வனாயினும் அறிவுடையவர் கூறுவன வற்றைக் கேட்டறிய வேண்டும். அக்கேள்வியறிவு அவனுக்கு மனத்தளர்ச்சி ஏற்படும் போது ஊன்று கோல் போல் துணை புரியும்.

Kovilloor Digital Library

ஜூன் - 19

அதி : கேள்வி குறள் : 416

**எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.**

ஒருவன் மிகச்சிறிய அளவினதாயினும் நன்மை தரும் சான்றோர் வாய்ச்சொல்லைக் கேட்கவேண்டும். அது சிறிதாயினும் அவனுக்கு நிறைந்த பெருமையைத் தரும்.

Koviloor Digital Library

ஜூன் - 20

அதி : அறிவுஉடைமை குறள் : 422

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தை அது போன போக்கில் போகவிடாமல் தடுத்து, தீமைகளிலிருந்து விலக்கி, நன்மையில் செல்ல விடுவதே அறிவாகும்.

Koviloor Digital Library

ஜூன் - 21

அதி : அறிவுஉடைமை குறள் : 424

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.**

உயர்ந்த கருத்துகளைத் தெளிவாகக் கூறுவதும், பிறர் கூறும் தெளிவற்ற சொற்களில் நுட்பமான பொருளைக் காண்பதும் அறிவாகும்.

Kovilbor Digital Library

ஜூன் - 22

அதி : அறிவுஉடைமை குறள் : 425

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

உயர்ந்தவர்களைத் தன்னுடையவர் களாகச் செய்து கொள்வதே அறிவு. அத்தொடர்பில் முதலில் மகிழ்ந்து விரிதலும் பின்னர் வருந்திக் குவிதலும் இல்லாததே அறிவாகும்.

Koviloor Digital Library

ஜூன் - 23

அதி : அறிவுஉடைமை குறள் : 429

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்.

வரக்கூடிய துன்பத்தை முன்னரே அறிந்து அதனின்றும் காத்துக் கொள்ளக் கூடிய அறிவை உடையவர்க்கு, அவர் நடுங்கக் கூடிய வகையில் வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

Koviloor Digital Library

ஜூன் - 24

அதி : குற்றம் கடிதல் குறள் : 433

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பழிச்சொல்லுக்கு நாணுகிற பெருமக்கள், தினை அளவான சிறு குற்றம் தம்மிடம் வந்தாலும் அதைப் பனையளவு பெரிதாகக் கருதி குற்றம் செய்யாமல் காத்துக் கொள்வர்.

Koviloor Digital Library

ஜுன் - 25

அதி : குற்றம் கடிதல் குறள் : 435

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

குற்றம் வருவதற்கு முன்பே, வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன்னே உள்ள வைக்கோல் போர் போல் அழிந்து விடும்.

Koviloor Digital Library

ஜூன் - 26

அதி : குற்றம் கடிதல் குறள் : 436

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கின்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

முதலில் தன் குற்றத்தைக் கண்டு நீக்கி, பிறகு பிறருடைய குற்றத்தை ஆராய்கின்ற தலைவனுக்கு ஒரு குற்றமும் ஏற்படாது.

Koviloor Digital Library

ஜுன் - 27

அதி : பெரியாரைத்துணைக்கோடல் குறள் : 441

**அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.**

அறத்தின் தன்மைகளை ஆராய்ந்து தன்னைவிட மூத்த (சிறந்த) அறிவுடையவர் களின் நட்பைக் கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஜுன் - 28

அதி : பெரியாரைத்துணைக்கோடல் குறள் : 443

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியோரை அவர்கட்கு உவப்பானவற்றைச் செய்து தம்மவராக ஆக்கிக் கொள்ளுதல் ஒருவர் பெறக்கூடிய சிறந்த பேறுகள் யாவற்றுள்ளும் மிகச் சிறந்ததாகும்.

Keviloor Digital Library

ஜூன் - 29

அதி : பெரியாரைத்துணைக்கோடல் குறள் : 447

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.

கடிந்து அறிவுரை கூறும் பெரியோர் களின் துணை கொண்டு நடப்பவரைக் கெடுக்கக் கூடியவர் எவருளர்?

Koviloor Digital Library

ஜுன் - 30

அதி : சிற்றினம் சேராமை **குறள் : 451**

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்.

பெரியோர் சிற்றினத்தைக் கண்டு அஞ்சி ஒதுங்குவர்; சிறியோர் அதையே சுற்றமாகக் கருதித் தம்முடன் சேர்த்துக்கொள்வர்.

Koviloor Digital Library

ஜூலை

உலகத்தின் ஒரேயொரு மூலையை நீங்கள் உறுதியாய் மேம்படுத்த முடியும். அது - உங்களுடைய ஆன்மாவாகும்.

Koviloor Digital Library

ஜூலை - 1

அதி : சிற்றினம் சேராமை **குறள் : 454**

மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉளது ஆகும் அறிவு.

அறிவு, ஒருவனது மனத்தில் உள்ளது போலக் காட்டினாலும் அவன் சேர்ந்த இனத்தை ஒட்டியதாகவே உண்டாகும்.

Koyiloor Digital Library

ஜுலை - 2

அதி : சிற்றினம் சேராமை குறள் : 457

மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

இவ்வுலகில் வாழும் மக்களுக்கு மனம் நலமுடையதாக இருந்தால் அது செல்வத்தைக் கொடுக்கும். சேரும் இனம் நல்லதாக இருந்தால் அது செல்வத்தோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

 Koviloor Digital Library

ஜூலை - 3

அதி : சிற்றினம் சேராமை குறள் : 460

நல்இனத்தின் ஊங்கும் துணைஇல்லை; தீஇனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

ஒருவனுக்கு நல்லோர் சேர்க்கையினும் சிறந்த துணையும் வேறு இல்லை. தீயோர் கூட்டுறவினும் துன்பம் தரும் கொடிய பகையும் வேறு இல்லை.

Koviloor Digital Library

ஜூலை - 4

அதி : தெரிந்து செயல்வகை குறள் : 461

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.**

ஒரு செயலைத் தொடங்குவதற்குமுன், அச் செயலைச் செய்வதால் வரும் நன்மை, தீமைகளையும் செய்து முடித்தபின் வரும் பயன்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

Koviloor Digital Library

ஜூலை - 5

அதி : தெரிந்து செயல்வகை குறள் : 463

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

பின்னே கிடைக்கக் கூடிய இலாபத்தை எதிர்நோக்கி மூலதனத்தை இழந்துவிடும் காரியத்தை அறிவுடையோர் மேற்கொள்ளார்.

Koviloor Digital Library

ஜூலை - 6

அதி : தெரிந்து செயல்வகை குறள் : 466

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

ஒருவன் தனது நிலைமைக்குத் தகாத செயல்களைச் செய்வதாலும் செய்யத்தக்க செயல்களைச் செய்யாது விடுவதாலும் கேடு அடைவான்.

Koviloor Digital Library

ஜூலை - 7

அதி : வலி அறிதல் குறள் : 471

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

செயலின் வலிமையையும், தன் வலிமையையும் பகைவனின் வலிமையை யும், துணை செய்பவர்களின் வல்லமை யையும் நன்கு ஆராய்ந்து அச்செயலைச் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

ஜூலை - 8

அதி : வலி அறிதல் குறள் : 475

**பீலிபெய் சாகாடும் அச்சுஇறும்; அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.**

மிக மென்மையான பொருளான மயில் இறகாக இருந்தாலும் வண்டியில் அளவுக்கு மேல் ஏற்றினால், வண்டியின் அச்சு முறிந்து விடும்.

Koviloor Digital Library

ஜூலை - 9

அதி : வலி அறிதல் குறள் : 478

**ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகுஆறு அகலாக் கடை.**

ஒருவனுக்குப் பொருள் வரும் வழியின் அளவு சிறியதாக இருந்தாலும், செலவு பெரிதாகாத போது அதனால் அவனுக்குக் கேடு உண்டாகாது.

Koviloor Digital Library

ஜூலை - 10

அதி : வலி அறிதல் குறள் : 479

**அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.**

தன் வருவாயின் அளவை அறிந்து செலவு செய்து வாழாதவனுடைய வாழ்க்கை இருப்பது போலவே யிருந்து இல்லாமல் ஒழிந்துவிடும்.

Koviloor Digital Library

ஜூலை - 11

அதி : காலம் அறிதல் குறள் : 481

பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

காகம் தன்னைக் காட்டிலும் வலிமையுடைய கோட்டானை அதற்குக் கண் தெரியாத பகற்பொழுதில் போரிட்டு வெல்லும். அதுபோலப் பகைவருடன் போரிட்டு வெல்லக் கருதும் அரசர்க்கு ஏற்ற காலம் இன்றியமையாதது.

Koviloor Digital Library

ஜுலை - 12

அதி : காலம் அறிதல் குறள் : 484

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.**

ஒருவன் காலமறிந்து, ஏற்ற இடம் அறிந்து ஒரு செயலைச் செய்வா னாயின் அவன் இவ்வுலகத்தையே ஆளக் கருதினாலும் அது கைகூடும்.

Koviloor Digital Library

ஜூலை - 13

அதி : காலம் அறிதல் குறள் : 485

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

உலகம் முழுவதையும் தம் கைக் கொள்ளக் கருதுபவர் வலிமையுடையவராயினும் அவ்வலிமையைப் பெரிதாகக் கருதாமல் தக்க காலத்தையே எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

Kovilloor Digital Library

ஜூலை - 14

அதி : காலம் அறிதல் குறள் : 486

**ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.**

முயற்சியுடையவன் அடங்கியிருப்பது, சண்டையில் ஆட்டுக்கடா, தாக்குவதற்கு வேகம் பெறுவதற்காக பின்னால் செல்வதைப் போன்றது.

Kovilloor Digital Library

ஜுலை - 15

அதி : இடன் அறிதல் குறள் : 494

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

பாதுகாப்பாயுள்ள இடத்தைப் பொருந்தி நின்று போர் செய்வாராயின், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை கைவிடுவர்.

Koyilo Digital Library

ஜூலை - 16

அதி : இடன் அறிதல் குறள் : 495

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

முதலை, ஆழமுள்ள நீர் நிலையில் பிற உயிர்களை வெற்றி கொள்ளும். அந்நீர் நிலையை விட்டு அது நீங்குமாயின் அம் முதலையைப் பிற உயிர்கள் வென்றுவிடும்.

Koviloor Digital Library

ஜுலை - 17

அதி : இடன் அறிதல் குறள் : 498

**சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.**

பகைவன் சிறுபடையையுடையவ னாயினும் தக்க இடத்தில் பொருந்தியிருந் தால் பெரும்படையை உடைய அரசன் தன் முயற்சியில் தோல்வியடைவான்.

ஜூலை - 18

அதி : தெரிந்து தெளிதல் குறள் : 501

அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

ஒருவனை அறம், பொருள், இன்பம், உயிர்ப் பொருட்டால் அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையிலும் ஆராய்ந்து தக்கவனாயின் அவனை நம்புதல் வேண்டும்.

Koviloor Digital Library

ஜூலை - 19

அதி : தெரிந்து தெளிதல் குறள் : 504

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவருடைய குணம், குற்றம் ஆகிய இரண்டினையும் ஆராய்ந்து, அவற்றுள் மிக்கது எதுவோ அதனால் அவரை நல்லவர் என்றோ தீயவர் என்றோ கொள்ள வேண்டும்.

Koyiloor Digital Library

ஜூலை - 20

அதி : தெரிந்து தெளிதல் குறள் : 505

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

ஒருவருடைய பெருமையை அறிவதற்கும் சிறுமையை அறிவதற்கும் அவர் செய்யும் செயலே தக்க உரை கல்லாகும்.

Koviloor Digital Library

ஜுலை - 21

அதி : தெரிந்து தெளிதல் குறள் : 510

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.**

ஒருவனை ஆராயாமல் நம்புதலும், ஆராய்ந்து நம்பிக்கை வைத்தவனிடம் சந்தேகப்படுதலும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

Koviloor Digital Library

ஜுலை - 22

அதி : தெரிந்து விளையாடல் குறள் : 513

**அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு.**

அன்பு, அறிவு, ஐயம் இல்லாமல் தெளியும் தெளிவு, அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனை, செயல்களை ஆற்றுமாறு தெளியலாம்.

Koviloor Digital Library

ஜூலை - 23

அதி : தெரிந்து விளையாடல் குறள் : 517

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

'இந்தத் தொழிலை இக்காரணங்களால் இவன் முடிப்பான்' என்று ஆராய்ந்து பிறகு அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஜூலை - 24

அதி : தெரிந்து விளையாடல் குறள் : 519

வினைக்கண் வினைஉடையான் கேண்மை வேறாக,
நினைப்பானை நீங்கும் திரு.

எப்போதும் தன் தொழிலில் முயற்சி உடையவரது நட்பினைப் பாராட்டாமல், வேறாக நினைப்பவனிட மிருந்து செல்வம் நீங்கும்.

Koviloor Digital Library

ஜூலை - 25

அதி : சுற்றம் தழால் குறள் : 522

விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.

அன்பு அழியாத நல்ல சுற்றம் ஒருவனுக்கு வாய்க்குமாயின் அஃது அவனுக்குக் குறைவில்லாத செல்வங்கள் பலவற்றையும் தரும்.

Koviloor Digital Library

ஜூலை - 26

அதி : சுற்றம் தழால் குறள் : 523

**அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் துஅற்று.**

சுற்றத்தாருடன் மனம் கலந்து பழகாதவனுடைய வாழ்வு, குளப்பரப்பு கரையில்லாமல் நீர் நிறைந்தாற் போல வீணே அழியும்.

Koviloor Digital Library

ஜுலை - 27

அதி : சுற்றம் தழால் குறள் : 525

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

உதவி செய்தும், இனிமையாகப் பேசியும் வாழ்பவனை உறவினர் சூழ்ந்து இருப்பர்.

Koviloor Digital Library

ஜூலை - 28

அதி : பொச்சாவாமை குறள் : 532

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றுஆங்கு.

நாள்தோறும் விடாமல் வரும் வறுமை, அறிவைக் கெடுப்பது போல, மறதி ஒருவனது புகழைக் கெடுத்து விடும்.

Koviloor Digital Library

ஜூலை - 29

அதி : பொச்சாவாமை குறள் : 533

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு.

மறதி உடையவர்களுக்குப் புகழுடன் வாழும் தன்மையில்லை. இது உலகத்திலுள்ள எல்லா நூல்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

Kovilloor Digital Library

ஜூலை - 30

அதி : பொச்சாவாமை குறள் : 534

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை; ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

உள்ளத்தில் அச்சம் உடையவர்களுக்குப் புறத்தில் அரண் இருந்தும் பயனில்லை. அதுபோல மறதி உடையவர்க்கு நல்லநிலை வாய்க்கப் பெற்றிருந்தும் பயனில்லை.

Koviloor Digital Library

ஜூலை - 31

அதி : வெருவந்த செய்யாமை குறள் : 565

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து.

எளிதில் காண முடியாத அருமையும், கடுகடுத்த முகமும் உடையவனின் பெருஞ் செல்வம் பேய் காவல் காத்திருப்பதைப் போன்ற குற்றமுடையது.

Koviloor Digital Library

ஆகஸ்ட்

தொடக்கத்தில் வெற்றிக்குத் தேவை – ஒரு மடங்கு பலனுக்குப் பத்து மடங்கு உழைப்பு! பிற்பாடு உங்கள் செயல்வேகம்! பத்து மடங்கு பலனை உண்டுபண்ண ஒரு மடங்கு உழைப்பே போதுமானது!

Kovilloor Digital Library

ஆகஸ்ட் - 1

அதி : வெருவந்த செய்யாமை குறள் : 568

**இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்
சீறின் சிறுகும் திரு.**

அமைச்சர் முதலானவரோடு கலந்து ஆராய்ந்து செய்யாமல் அரசன் தன் சினத்தின் வழியிலேயே சென்று பிறரைச் சீறுவான் ஆனால் அவனுடைய செல்வம் சுருங்கும்.

Koyil.org Digital Library

ஆகஸ்ட் - 2

அதி : கண்ணோட்டம் குறள் : 571

கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டுஇவ் வுலகு.

கண்ணோட்டம் என்று சொல்லப்படும் மிகச் சிறந்த அழகு இருப்பதனால்தான், இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது. (கண்ணோட்டம் : தாட்சண்யம், பரிவு நோக்கு)

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 3

அதி : கண்ணோட்டம் குறள் : 573

பண்என்ஆம் பாடற்கு இயைபுஇன்றேல்; கண்என்ஆம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை; அதுபோல் தக்க அளவிற்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தில் உள்ளவைபோல் தோன்றுமே அல்லாது வேறு என்ன பயனைச் செய்யும்?

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 4

அதி : கண்ணோட்டம் குறள் : 575

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும்.

கண்ணிற்கு அணிகலமாக அமைவது கண்ணோட்டம். அக்கண்ணோட்டமாகிய அணிகலன் இல்லையாயின் அக்கண்கள் அறிவுடையோரால் புண் என்று கருதப்படும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 5

அதி : கண்ணோட்டம் குறள் : 576

**மண்ணோடு இயைந்த மரத்துஅனையர்; கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர்.**

கண் கொண்டிருந்தும் இரக்கம் கொண்டில்லாதவர் மண்ணோடு இருக்கும் மரத்தைப் போன்றவர்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 6

அதி : கண்ணோட்டம் குறள் : 577

கண்ணோட்டம் இல்லவர் கண்இலர்; கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

ஒருவனுக்கு இரக்கம் இல்லை என்றால் அவன் கண்ணில்லாதவன். இரக்கம் உடை யவன் என்றால் அவன் கண்ணுள்ளவன்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 7

அதி : ஊக்கம் உடைமை குறள் : 592

**உள்ளம் உடைமை உடைமை; பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.**

ஊக்கம் உடைமையே ஒருவனுக்கு நிலையான செல்வம். ஏனைய பொருள் வளத்தைப் பெற்றிருந் தாலும் அவை நிலைத்து நில்லாமல் அழிந்து விடும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 8

அதி : ஊக்கம் உடைமை குறள் : 593

ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார்.

உறுதியான ஊக்கத்தைத் தம்முடைய கைப் பொருளாகக் கொண்டவர்கள், செல்வம் இழந்துவிட்ட காலத்திலும் இழந்து விட்டோம் என்று வருந்த மாட்டார்கள்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 9

அதி : ஊக்கம் உடைமை குறள் : 594

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை.

தளர்ச்சியில்லாத ஊக்கம் உடையவ னிடம், செல்வம் வழி கேட்டுக் கொண்டு வந்து சேரும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 10

அதி : ஊக்கம் உடைமை **குறள் : 595**

வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

தண்ணீரிலே மலரும் பூவின் தண்டினுடைய நீளம், தண்ணீர் உயரத்துக்கு இருக்கும். அதுபோல் மனத்தில் ஊக்கம் உள்ள அளவுக்கு உயர்வு இருக்கும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 11

அதி : ஊக்கம் உடைமை குறள் : 596

உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

ஒருவர் தாம் செய்யக் கருதும் எதனையும் உயர்ந்த தாகவே நினைக்க வேண்டும். அதனை முடிக்க முடியா விட்டாலும் உயர்வாக எண்ணுவதை விட்டுவிடக் கூடாது.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 12

அதி : ஊக்கம் உடைமை குறள் : 597

சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதைஅம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

யானை அம்புகளால் புண்பட்டாலும் மனம் தளராமல் தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கமுடையவர்கள் தம் உயர்வுக்கு அழிவு வந்தபோதும் மனம் தளராமல் தம் பெருமையை நிலைநாட்டுவர்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 13

அதி : ஊக்கம் உடைமை குறள் : 600

**உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃதுஇல்லார்
மரம்; மக்கள் ஆதலேவேறு.**

ஊக்க மிகுதியே ஒருவனுக்குத் திண்ணிய அறிவாகும். அவ்வூக்கம் இல்லாதவர் மரத்திற்குச் சமமாவர். மரங்களோடு அவர்க்குள்ள வேறுபாடு யாதெனில் அவர்கள் உருவத்தால் மக்களாய் இருப்பதேயாகும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 14

அதி : மடி இன்மை **குறள் : 601**

குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும்.

ஒருவன் பிறந்த குடியாகிய அணையா விளக்கு அவனுடைய சோம்பலாகிய அழுக்கு படியப்படிய ஒளி குறைந்து (தேய்ந்து) அணைந்து போகும்.

Kovilpor Digital Library

ஆகஸ்ட் - 15

அதி : மடி இன்மை குறள் : 604

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்க்கு.

சோம்பலில் சிக்கி, முயற்சியில்லாமல் வாழ்கின்றவனின் குடும்பம் பெருமையிழக்கும்; குற்றமும் பெருகும்.

Koyiloor Digital Library

ஆகஸ்ட் - 16

அதி : மடி இன்மை குறள் : 605

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.**

சோம்பலும், காலம் நீட்டித்துக் காரியம் செய்யும் குணமும், மறதியும், உறக்கமும் ஆகிய இந்த நான்கு குணங்களும் அழியும் இயல்புடையார் விரும்பி ஏறும் மரக்கலமாகும்.

Kovilloor Digital Library

ஆகஸ்ட் - 17

அதி : மடி இன்மை குறள் : 608

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

நல்ல குடியில் பிறந்தவனிடம் சோம்பல் வந்து சேர்ந்து கொண்டால், அவன் குடும்பமே பகைவருக்கு அடிமையாகி விடும்.

Kovilbol Digital Library

ஆகஸ்ட் - 18

அதி : மடி இன்மை குறள் : 610

மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

ஆள்கின்றவனுக்குச் சோம்பல் இல்லையென்றால் திருமாலின் திருவடி களால் அளக்கப் பெற்ற இந்த உலகம் முழுவதையும் அவன் அடைவான்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 19

அதி : ஆள்வினை உடைமை **குறள் : 611**

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

இது செய்வதற்கு முடியாத செயல் என்று சோர்வடையாமல் இருக்க வேண்டும்; இடைவிடாத முயற்சி அதைச் செய்து முடிக்கும் வலிமையைத் தரும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 20

அதி : ஆள்வினை உடைமை குறள் : 614

தாள்ஆண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை
வாள்ஆண்மை போலக் கெடும்.

முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய நினைப்பது, பேடி (கோழை) தன் கையில் வாளை எடுத்து ஆண்மையைக் காட்டுவது போன்றது.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 21

அதி : ஆள்வினை உடைமை குறள் : 616

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

முயற்சி ஒருவனுடைய செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாமை அவனிடத்து வறுமையைச் சேர்த்து விடும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 22

அதி : ஆள்வினை உடைமை குறள் : 617

மடிஉளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாள்உளாள் தாமரையி னாள்.

ஒருவனுடைய சோம்பலில் கரிய மூதேவி வாழ்கின்றாள். சோம்பல் இல்லாதவனுடைய முயற்சியில் ஸ்ரீ தேவி (திருமகள்) வாழ்கின்றாள்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 23

அதி : ஆள்வினை உடைமை குறள் : 619

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போனாலும், முயற்சி தன் உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது நிச்சயம் கொடுக்கும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 24

அதி : ஆள்வினை உடைமை குறள் : 620

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

மனத்தளர்ச்சியில்லாமல் எத்தகைய குறைபாடும் இன்றி மேன்மேலும் முயன்று உழைப்பவர் வெற்றி பெறும் முயற்சிக்கு இடையூறாக வரும் விதியையும் வென்று விடுவார்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 25

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 621

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

துன்பம் வரும் போது அதற்காக வருந்தாமல் நகைத்து ஒதுக்குக. அத்துன்பத்தை வெல்லுவதற்கு அதைப் போன்றது வேறு இல்லை.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 26

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 623

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.**

துன்பம் வந்த போது அதற்காக வருந்திக் கலங்காதவர் அத்துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவர்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 27

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 624

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

பார வண்டியை இழுத்துச் செல்லும் எருது தடை நேர்ந்த போதெல்லாம் முயன்று இழுத்துச் செல்லும். அதைப் போல மனம் கலங்காதவனை அடைந்த துன்பம் துன்பப்பட்டு ஓடும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 28

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 625

**அடுக்கி வரினும் அழிவுஇலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.**

மேன் மேலும் துன்பங்கள் வந்தாலும் நெஞ்சம் கலங்காதவன் அடைந்த துன்பம் துன்பப்பட்டு விலகிப் போகும்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 29

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 627

**இலக்கம் உடம்பு இடும்பைக்குஎன்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

மேலோர், தம் உடம்பு துன்பத்திற்கு இலக்கானது என்று அறிந்து, துன்பம் வந்தபோது அதற்காக வருந்த மாட்டார்கள்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 30

அதி : இடுக்கண் அழியாமை குறள் : 629

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.**

இன்பம் வரும்போது மகிழ்ச்சியடையா தவன், துன்பம் வந்தபோது அத்துன்பத்தைக் கண்டு வருந்த மாட்டான்.

Koviloor Digital Library

ஆகஸ்ட் - 31

அதி : சொல் வன்மை குறள் : 641

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.

ஒருவனுக்கு இன்றியமையாத குணங்களுள் சிறந்தது நாவன்மையாம். அந்த நலம் ஏனைய நலங்களையும்விட மேலான சிறப்புடையது.

Koviloor Digital Library

செப்டம்பர்

தொலைநோக்கு மட்டும் போதாது துணிகரமான செயல்பாடும் இணைந் திருக்க வேண்டும்!

படிக்கட்டுகளைக் கண்டு மலைக்கக் கூடாது, நாம் – படிப்படியாய் ஏறிக் கடந்தாக வேண்டும்!

Koviloor Digital Library

செப்டம்பர் - 1

அதி : சொல் வன்மை குறள் : 642

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு.

ஒருவருக்கு நன்மையும் அழிவும் தம் சொற்களால் ஏற்படும். ஆதலால் அத்தகைய சொற்களைச் சொல்லு மாறு சோர்வு நேராதவாறு போற்றிக் காக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 2

அதி : சொல் வன்மை குறள் : 643

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

கேட்பவர் உள்ளத்தைக் கவரும் தன்மை கொண்டதாகவும், கேளாதவரும் கேட்பதற்கு விருப்பப்படும் வகையிலும் சொல்லப்படுவதே சிறந்த சொல்வன்மை ஆகும்.

Kovilloor Digital Library

செப்டம்பர் - 3

அதி : சொல் வன்மை குறள் : 644

**திறன்அறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல்.**

சொல்லின் திறத்தை அறிந்து சொல்லைச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்வதை விட மேலான அறமும் பொருளும் இல்லை.

Koviloor Digital Library

செப்டம்பர் - 4

அதி : சொல் வன்மை குறள் : 645

சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல், அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

ஒருவர் தாம் சொல்லும் சொல்லை வெல்லக்கூடிய மற்றொரு சொல் இல்லாத வகையில் ஆராய்ந்து அறிந்து அச்சொல்லைச் சொல்ல வேண்டும். அதுவே சிறந்த சொல்வன்மையாகும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 5

அதி : சொல் வன்மை குறள் : 647

**சொலல்வல்லன், சோர்வுஇலன், அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

சொல்வன்மை உடையவனாயும், உள்ளச் சோர்வு இல்லாதவனாயும் சபைக்கு அஞ்சாத வனாயும் உள்ள ஒருவனை வெல்லுதல் எவருக்கும் முடியாது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 6

அதி : சொல் வன்மை குறள் : 650

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.

தாம் கற்ற நூற்பொருளைப் பிறரும் அறியும்படியாக விளக்கிச் சொல்லத் தெரியாதவர், கொத்தாக மலர்ந் திருந்தும் மணம் பரப்பாத மலரைப் போன்றவர்களாவர்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 7

அதி : வினைத் தூய்மை குறள் : 656

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ஒருவன், பெற்ற தாய் பசியோடு இருத்தலைக் கண்டு வருந்தும் நிலையில் இருந்தாலும், அது கருதி, அறிவுடையோர் பழிக்கக் கூடிய தூய்மையற்ற செயல்களைச் செய்யக் கூடாது.

செப்டம்பர் - 8

அதி : வினைத் தூய்மை குறள் : 657

**பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.**

பழிக்குக் காரணமான செயல்களைச் செய்து பெறுகின்ற செல்வத்தைக் காட்டிலும் அறிவுடைய நல்லோரை வருத்தும் பொல்லாத வறுமையே மேலானது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 9

அதி : வினைத் தூய்மை குறள் : 658

கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

நல்லோரால் தூய்மை இல்லாதன என்று விலக்கப்பட்ட செயல்களைத் தாமும் விலக்காமல் அதைச் செய்தவர்க்கு அச் செயல் முடிந்தாலும் துன்பத்தையே தரும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 10

அதி : வினைத் தூய்மை **குறள் : 659**

அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

பிறர் அழுமாறு தீவினையால் தேடிய செல்வங்கள் எல்லாம் அவனும் அவ்வாறே வருந்தி அழுமாறு அவனை விட்டு நீங்கி விடும். நல்வினையால் தேடிய செல்வங்கள் இழக்க நேர்ந்தாலும் பின்னர் அவனை அடைந்து பயன் தரும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 11

அதி : வினைத் தூய்மை குறள் : 660

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று.

வஞ்சகச் செயலால் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது, பச்சை மண் பாத்திரத்தில் நீரை ஊற்றிப் பாதுகாப்பது போன்ற பயனில்லாச் செயலாகும்.

Kovilsor Digital Library

செப்டம்பர் - 12

அதி : வினைத் திட்பம் குறள் : 661

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.

தொழில் வலிமை என்பது ஒருவனுடைய மனத்தின் வலிமையே ஆகும். மற்றவை எல்லாம் மன வலிமைக்குப் பின்தான்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 13

அதி : வினைத் திட்பம் குறள் : 666

எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

எண்ணியவர் மன வலிமையுடைய வராய் இருந்தால் நினைத்த பொருள்கள் எல்லாவற்றையும் எண்ணியபடியே அடைவார்கள்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 14

அதி : வினைத் திட்பம் குறள் : 667

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்; உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.

உருளுகின்ற பெரிய தேருக்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய ஆணி போன்றவர்கள் உலகத்தில் உள்ளனர். அதனால் ஒருவரது உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 15

அதி : வினைத் திட்பம் குறள் : 668

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

மனம் கலங்காமல் மேற்கொண்ட தொழிலைச் சோர்வு கொள்ளாமலும், காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 16

அதி : வினைத் திட்பம் குறள் : 669

துன்பம் உறவரினும் செய்க, துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

ஆரம்பத்தில் துன்பம் மிகுதியாக வந்தாலும், அதற்காக மனத்தளர்ச்சி கொள்ளாமல் முடிவில் உண்டாகும் இன்பத்தை எண்ணி அதனைச் செய்து முடிக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 17

அதி : வினைத் திட்பம் குறள் : 670

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

வேறு எத்தகைய உறுதி உடையவராக இருந்தாலும் செய்யும் தொழிலில் உறுதி இல்லாதவரை உலகம் விரும்பிப் போற்றாது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 18

அதி : வினை செயல்வகை **குறள் : 672**

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

காலந்தாழ்த்திச் செய்யக் கூடியவற்றைக் காலம் தாழ்த்தியே செய்ய வேண்டும்; விரைந்து செய்ய வேண்டியவற்றைக் காலம் தாழ்த்தக் கூடாது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 19

அதி : வினை செயல்வகை குறள் : 675

**பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.**

ஒரு செயலைச் செய்யும் போது அது எளிதில் முடிதற்கு வேண்டிய பொருள், கருவி, காலம், செயல்முறை, இடம் ஆகிய ஐந்தையும் தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 20

அதி : வினை செயல்வகை குறள் : 676

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

ஒரு செயலைச் செய்ய முற்படும்போது, முயற்சியின் அளவையும் இடையூறுகளை யும் அதனால் வரும் பயனையும் நன்கு ஆராய்ந்து, பயன் பெரிதாயின் அச்செயலைச் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 21

அதி : வினை செயல்வகை குறள் : 677

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்.

செயல்பட்டு வெற்றியடைய விரும்பு கிறவன், ஏற்கெனவே அச்செயலில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவரின் கருத்துகளை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 22

அதி : வினை செயல்வகை குறள் : 678

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

ஒருவன் ஒரு தொழிலைச் செய்யும் போது, அதனுடன் தொடர்புடைய மற்றொரு செயலையும் முடிப்பது, பழக்கிய யானையைக் கொண்டு வேறு ஒரு யானையைப் பிடிப்பதைப் போன்றது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 23

அதி : மன்னரைச் சேர்ந்தொழுகல் குறள் : 691

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

விரைவில் கோபங்கொள்ளும் மன்னரைச் (பெரியோரை) சார்ந்து வாழ்கின்றவர் அவரை விட்டு நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர்காய்கின்றவர் போல இடை நிலத்தில் இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 24

அதி : மன்னரைச் சேர்ந்தொழுகல் குறள் : 694

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

வல்லமை அமைந்த அரசர் அருகே இருந்தால், காதோடு காதாகப் பேசுவதையும் பிறரோடு சேர்ந்து சிரிப்பதையும் நீக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 25

அதி : குறிப்பு அறிதல் குறள் : 702

**ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.**

பிறன் மனத்தில் நிகழும் கருத்தை ஐயத்திற்கு இடம் இல்லாமல் நிச்சயமாக அறியக் கூடிய திறம் உடையவனை மனிதனாயினும் தெய்வத்திற்குச் சமமாக மதிக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 26

அதி : குறிப்பு அறிதல் குறள் : 703

குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

ஒருவரது முகக் குறிப்பினாலேயே அவரது கருத்துகளை உணர்கின்றவரை எதைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 27

அதி : குறிப்பு அறிதல் குறள் : 709

பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

கண் பார்வையால் கருத்தை வகைப்படுத்தி உணர்பவரைத் துணையாகப் பெற்றால், ஒருவரது பகைமையையும் நட்பையும் அவரது கண்களே தமக்குச் சொல்லிவிடும்.

Kovilloor Digital Library

செப்டம்பர் - 28

அதி : அவை அறிதல் குறள் : 713

அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகைஅறியார் வல்லதூஉம் இல்.

அவையின் தன்மையறியாமல் சொல்ல முற்பட்டவர் சொற்களின் வகை அறியாதவரே; அவர்களால் எதையும் சாதிக்க முடியாது.

Koviloor Digital Library

செப்டம்பர் - 29

அதி : அவை அறிதல் குறள் : 714

**ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்**

அறிவிற் சிறந்தவர்கள் முன் தாமும் அறிவிற் சிறந்தவராய்ப் பேசவேண்டும். அறிவில்லாதவர் முன் தாமும் வெண் சுண்ணம் போல் அறிவில்லாதவராய் இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

செப்டம்பர் - 30

அதி : அவை அறிதல் குறள் : 715

நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

அறிவால் முதிர்ந்தவர் அவையில் முந்திச் சென்று பேசாத அடக்கம் ஒருவனுக்குச் சிறந்த நன்மையைத் தருவதாகும்.

Koviloor Digital Library

அக்டோபர்

நீங்கள் உணவை விரும்பினால் அதற்காக உழைக்க வேண்டும்! நீங்கள் அறிவை விரும்பினால் அதற்காக உழைக்க வேண்டும்! நீங்கள் இன்பங்களைப் பெற விரும்பினால் அவற்றுக்காக உழைக்க வேண்டும்! உழைப்பு ஒரு விதி!

Koyiloor Digital Library

அக்டோபர் - 1

அதி : அவை அறிதல் குறள் : 719

**புல்அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க; நல்அவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.**

நல்ல அறிஞர்கள் அவையில் சிறந்தவற்றை சொல்ல வல்லவர், அறிவில்லாதவரின் கூட்டத்தில் மறந்தும் பேசக் கூடாது.

Koviloor Digital Library

அக்டோபர் - 2

அதி : அவை அஞ்சாமை குறள் : 722

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

கற்றவர்களுள் கற்றவர் என்று புகழப்படுகின்றவர்கள் கற்றவர் அவையின் முன், தாம் கற்றதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லக் கூடியவர்களேயாவர்.

Koviloor Digital Library

அக்டோபர் - 3

அதி : அவை அஞ்சாமை குறள் : 725

ஆற்றின் அளவுஅறிந்து கற்க; அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தல் பொருட்டு.

அவையில் உள்ளவர் கேள்வி எழுப்பினால், அஞ்சாமல் பதில் சொல்லும் அளவுக்குத் தெளிவான விடைகளை அறிந்து கொள்ள தகுந்த நூல்களை நிறைய படிக்க வேண்டும்.

Kovilloor Digital Library

அக்டோபர் - 4

அதி : அவை அஞ்சாமை குறள் : 728

பல்லவை கற்றும் பயம்இலரே நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

நல்ல அறிஞர்களின் அவையில் நல்ல பொருளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர் பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் பயன் இல்லாதவரே.

Koviloor Digital Library

அக்டோபர் - 5

அதி : அவை அஞ்சாமை குறள் : 729

கல்லா தவரின் கடைஎன்ப, கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார்.

நூல்களைக் கற்றறிருந்திருந்த போதிலும் நல்ல அறிஞரின் அவைக்கு அஞ்சுகின்றவர், கல்லாதவரை விடக் கீழானவரே.

Koviloor Digital Library

அக்டோபர் - 6

அதி : அவை அஞ்சாமை குறள் : 730

**உளர்எனினும் இல்லாரோடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.**

அவைக் களத்தை அஞ்சித் தாம் கற்றவற்றை அதற்கு ஏற்கச் சொல்ல மாட்டாதவர் உயிர் வாழ்கின்றாராயினும் இறந்தவருக்கு ஒப்பானவரே.

Koviloor Digital Library

அக்டோபர் - 7

அதி : பொருள் செயல்வகை குறள் : 751

பொருள் அல்லவரைப் பொருள்ஆகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள்.

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்யும் செல்வத்தைத் தவிர இவ்வுலகில் சிறந்த பொருள் வேறு எதுவும் இல்லை.

Koviloor Digital Library

அக்டோபர் - 8

அதி : பொருள் செயல்வகை குறள் : 752

**இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.**

எல்லா நன்மையும் உடையவராயினும் செல்வம் இல்லாத வறியவரை யாவரும் இகழ்வர். எல்லாத் தீமையும் உடையவ ராயினும் செல்வம் உடையவரை யாவரும் பெருமை செய்வர்.

Koviloor Digital Library

அக்டோபர் - 9

அதி : பொருள் செயல்வகை குறள் : 753

**பொருள்என்னும் பொய்யா விளக்கம், இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.**

செல்வம் என்று சிறப்பித்துக் கூறப்படும் அணையாத விளக்கு, நினைத்த நாட்டிற்குச் சென்று பகை என்னும் இருளை அழிக்கும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 10

அதி : பொருள் செயல்வகை குறள் : 754

**அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள்.**

சேர்க்கும் திறம் அறிந்து, தீமையொன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்ட பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும்; இன்பத்தையும் கொடுக்கும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 11

அதி : பொருள் செயல்வகை குறள் : 755

**அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்
புல்லார் புரள விடல்.**

அருளோடும் அன்போடும் பொருந்தி வாராத செல்வத்தைப் பெற்று மகிழாமல், அதைத் தீமையானது என்று நீக்கிவிட வேண்டும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 12

அதி : பொருள் செயல்வகை குறள் : 757

**அருள்என்னும் அன்புஈன் குழவி; பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.**

அன்பினால் பெறப்பட்ட அருள் என்னும் குழந்தை, பொருள் என்று புகழ்ந்து சொல்லப்படும் செல்வத்தை யுடைய செவிலித்தாயால் வளரும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 13

அதி : நட்பு   குறள் : 781

செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு.

நட்பைப் போல் செய்துகொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன? அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன?

Koviloor Digital Library

அக்டோபர் - 14

அதி : நட்பு குறள் : 782

**நிறைநீர நீரவர் கேண்மை; பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.**

அறிவுடையார் நட்பு பிறைச்சந்திரன் வளர்வது போல் நாள்தோறும் வளர்ந்து பெரும் பயன் தரும். அறிவில்லாதவர் நட்பு முழு நிலவு பின்னர்த் தேய்வது போல நாள்தோறும் குறைந்து முடிவில் இல்லாது ஒழியும்!

Koviloor Digital Library

அக்டோபர் - 15

அதி : நட்பு — குறள் : 784

நகுதல் பொருட்டுஅன்று நட்டல்; மிகுதிக்கண்
மேல்சென்று இடித்தல் பொருட்டு.

ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்வது தம்முள் கூடிப் பேசி சிரித்து மகிழ்வதற்கு அன்று. நண்பர் வரம்பு கடந்து ஒழுகுவாராயின் கண்டித்து அறிவுரை கூறித் திருத்துதற்கேயாம்.

 Koviloor Digital Library

அக்டோபர் - 16

அதி : நட்பு குறள் : 785

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை. ஒத்த அன்புணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 17

அதி : நட்பு குறள் : 787

அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

அழிவைத் தரும் தீமைகளிலிருந்து தடுத்து, நல்ல வழியில் நடக்கச் செய்து அழிவு வந்த காலத்தில் உடனிருந்து துன்பம் அனுபவிப்பதே நட்பாகும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 18

அதி : நட்பு குறள் : 788

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

உடை நெகிழ்ந்தவனது கை உடனே அதைப் பிடிப்பதற்கு உதவி செய்வது போல, நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்போதே சென்று அதைக் களைவதுதான் நல்ல நட்பு.

Koviloor Digital Library

அக்டோபர் - 19

அதி : நட்பு ஆராய்தல் **குறள் : 791**

நாடாது நட்டலின் கேடுஇல்லை; நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.

நட்பை விரும்பி மேற்கொள்பவருக்கு, ஒருவரோடு நட்பு செய்த பிறகு அவரை விடுதல் இயலாது. ஆதலால் ஆராயாமல் நட்புச் செய்வதைப் போல் கேடு தருவது வேறு இல்லை.

Koviloor Digital Library

அக்டோபர் - 20

அதி : நட்பு ஆராய்தல் குறள் : 793

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.

ஒருவனுடைய குணத்தையும், குடிப் பிறப்பையும் குற்றத்தையும், குறைவற்ற சுற்றத்தையும் ஆராய்ந்து அவற்றில் நல்லவனாக இருந்தால் அவனோடு நட்புச் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 21

அதி : நட்பு ஆராய்தல் குறள் : 794

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

உயர்ந்த குடியில் பிறந்து தன் மீது பிறர் கூறும் பழிக்கு அஞ்சுபவனைச் சில பொருள்களைக் கொடுத்தாவது நட்புச் செய்துகொள்ளல் மிகச் சிறப்புடையதாகும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 22

அதி : நட்பு ஆராய்தல் குறள் : 795

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

தாம் உலக வழக்கு அல்லாததைச் செய்யக் கருதினால், அழுமாறு சொல்லி விலக்கியும், இடித்துக் கூறியும் உலக வழக்கறிந்து செய்விக்க வல்லாரை ஆராய்ந்தறிந்து நட்புச் செய்க.

Koviloor Digital Library

அக்டோபர் - 23

அதி : நட்பு ஆராய்தல் குறள் : 800

**மருவுக மாசுஅற்றார் கேண்மை, ஒன்றுஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு.**

குற்றமற்ற நல்லவரின் நட்பையே கொள்க. தீயோர் நட்பை அவர் வேண்டிய ஒன்றைக் கொடுத்தாவது கைவிடுக.

Koviloor Digital Library

அக்டோபர் - 24

அதி : பழைமை குறள் : 804

**விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.**

உரிமையால் கேளாமலே நண்பர் ஒன்றைச் செய்தால் அதைத் தாமும் விரும்பினவரைப் போல் உடன் பட்டிருப்பவர் அறிஞர்.

Koviloor Digital Library

அக்டோபர் - 25

அதி : பழைமை குறள் : 805

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

தாம் வெறுக்கத் தக்கனவற்றை நண்பர் செய்தாராயின் அதற்குக் காரணம் அறியாமை என்றோ, மிகுந்த உரிமை என்றோ கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 26

அதி : பழைமை குறள் : 806

**எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.**

நட்பின் எல்லையில் நின்றவர், தமக்குத் துன்பம் வந்தபோது உதவியவரின் நட்பை, அவரால் துன்பம் வந்தபோதும் விடார்.

Koviloor Digital Library

அக்டோபர் - 27

அதி : பழைமை குறள் : 810

விழையார் விழையப் படுப; பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

பழைய நண்பர் பிழை செய்தாராயினும் அவரை மறவாதவர்கள் பகைவராலும் விரும்பப்படுவர்.

Koviloor Digital Library

அக்டோபர் - 28

அதி : தீ நட்பு குறள் : 814

அமர்அகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

போர் வந்தபோது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் பயிற்சியற்ற குதிரை போன்றவரின் உறவை விடத் தனிமையே மிகவும் சிறந்தது.

Koviloor Digital Library

அக்டோபர் - 29

அதி : தீ நட்பு குறள் : 818

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

நாம் செய்யும் செயலைச் செய்ய விடாமல் வீண் பொழுது போக்குபவரது உறவை, அவரோடு பேசுவதைக் கைவிட்டு நீக்கிவிட வேண்டும்.

Koviloor Digital Library

அக்டோபர் - 30

அதி : தீ நட்பு   குறள் : 819

**கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.**

சொல்வது வேறு, செய்வது வேறு என ஒன்றுக்கொன்று வேறுபட்டவருடைய நட்பானது நனவில் மட்டுமல்லாமல் கனவிலும் துன்பம் தரும் என்பதாம்.

Koviloor Digital Library

அக்டோபர் - 31

அதி : பேதைமை குறள் : 832

பேதைமையுள் எல்லாம் பேதைமை; காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

ஒருவனது பேதைமை எல்லாவற்றுள் ளும் மிக்க பேதைமையாவது, தனக்கு ஆகாத ஒழுக்கத்தின் கண் விருப்பத்தைச் செலுத்துதல்.

Koviloor Digital Library

நவம்பர்

எப்போதும் நேரம் ஒதுக்குங்கள், புன்னகைக்கவும், மகிழ்ச்சியாயிருக்கவும். மகிழ்ச்சியற்ற வாழ்க்கை அலைப்புண்டு போகும்.

Koviloor Digital Library

நவம்பர் - 1

அதி : பேதைமை குறள் : 834

ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும், பிறர்க்கு எடுத்துச் சொல்லியும், தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதை போல வேறு பேதையர் இல்லை.

Koviloor Digital Library

நவம்பர் - 2

அதி : பேதைமை குறள் : 837

ஏதுஇலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

பேதை பெருஞ்செல்வம் அடைந்த போது தொடர்பில்லாத பலர் நன்றாக அனுபவிப்பர், ஆனால் அவன் சுற்றத்தார் பசியால் வாடுவர்.

Koviloor Digital Library

நவம்பர் - 3

அதி : புல்லறிவாண்மை குறள் : 841

அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

அறிவில்லாத தன்மையே வறுமையுள் கொடிய வறுமை. பிற பொருள் இல்லாத வறுமையை உலகம் நிலையான வறுமையாகக் கருதாது.

Koviloor Digital Library

நவம்பர் - 4

அதி : புல்லறிவாண்மை குறள் : 844

வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

தனக்கு எல்லாம் தெரியும் என்னும் ஆணவமே அறிவு முதிர்ச்சியில்லாத்தனம் எனப்படும்.

Koviloor Digital Library

நவம்பர் - 5

அதி : புல்லறிவாண்மை **குறள் : 849**

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

அறிவற்றவனுக்கு அறிவிப்பவன் தானே அறிவில்லாதவனாய் நிற்பான்; அறிவு இல்லாதவனோ தான் அறிந்த வகையில் அறிவுள்ளவனாய்த் தோன்றுவான்.

Koviloor Digital Library

நவம்பர் - 6

அதி : இகல் குறள் : 853

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

ஒருவன் இகல் (பகை) என்னும் துன்ப நோயை நீக்கிவிட்டால் அது அவனுக்கு அழிவில்லாத புகழைக் கொடுக்கும்.

Koviloor Digital Library

நவம்பர் - 7

அதி : இகல் குறள் : 855

இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர்.

வேற்றுமையை எதிர்த்து ஒற்றுமையை விரும்பி நடக்கின்றவரை யாராலும் வெல்ல முடியாது.

Koviloor Digital Library

நவம்பர் - 8

அதி : பகை மாட்சி குறள் : 865

**வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்புஇலன் பற்றார்க்கு இனிது.**

ஒருவன் நீதிநூலை ஓதாமலும், அது விதித்த தொழில்களைச் செய்யாமலும், தனக்கு வரும் பழியை நோக்காமலும், நற்பண்பு இல்லாமலும் இருந்தால் அவன் பகைவர்க்கு எளியனாவான்.

நவம்பர் - 9

அதி : பகை மாட்சி குறள் : 868

குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம்; ஏமாப்பு உடைத்து.

ஒருவன் குணம் இல்லாதவனாய், குற்றம் பல உடையவனாய் இருந்தால் அவன் துணை இல்லாதவன் ஆவான். அந்த நிலை அவனுடைய பகைவர்க்குச் சாதகமாகும்.

Koviloor Digital Library

நவம்பர் - 10

அதி : பகைத்திறம் தெரிதல் குறள் : 872

வில்ஏர் உழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்ஏர் உழவர் பகை.

வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகை கொண்ட போதிலும், சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக் கூடாது.

Koviloor Digital Library

நவம்பர் - 11

அதி : பகைத்திறம் தெரிதல் குறள் : 874

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொண்டு நடக்கும் பண்புடையவனது பெருந்தன்மையில் உலகம் தங்கியிருக்கும்.

Koviloor Digital Library

நவம்பர் - 12

அதி : பகைத்திறம் தெரிதல் குறள் : 875

**தன்துணை இன்றால் பகைஇரண்டால்; தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று.**

தனக்கு ஒரு துணையும் இல்லை; நலிவு செய்யும் பகையோ இரண்டு. அச்சமயத்தில் ஒருவன் பகைகளுள் ஒன்றைத் தனக்கு இனிய துணையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

நவம்பர் - 13

அதி : பகைத்திறம் தெரிதல் குறள் : 879

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

முள் மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்டி விட வேண்டும். காழ்ப்பு ஏறி முதிர்ந்தபோது வெட்டுகின்றவரின் கையையே அது வருத்தும்.

Koviloor Digital Library

நவம்பர் - 14

அதி : உட்பகை குறள் : 881

நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

இன்பம் தரும் நிழலும் நீரும் நோய் செய்வனவாக இருந்தால் தீயனவேயாகும்; அதுபோல சுற்றத்தாரின் இயல்புகளும் துன்பம் தருமானால் தீயனவேயாகும்.

Koviloor Digital Library

நவம்பர் - 15

அதி : உட்பகை குறள் : 882

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

வாளைப்போல் வெளிப்பட்டு நிற்கும் பகைவர்க்கு அஞ்ச வேண்டாம். ஆனால் சுற்றத்தார் போல அன்பு காட்டி உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

Koviloor Digital Library

நவம்பர் - 16

அதி : உட்பகை குறள் : 890

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் துஅற்று.

மனப் பொருத்தம் இல்லாதவரோடு ஒருவன் வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்போடு உடன் வாழ்வதைப் போன்றது.

Koviloor Digital Library

நவம்பர் - 17

அதி : பெரியாரைப் பிழையாமை குறள் : 896

எரியால் சுடப்படினும் உய்வுஉண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்துஒழுகு வார்.

நெருப்பினால் எரிக்கப்பட்டாலும் அதிலிருந்து தப்பிப் பிழைக்க வழியுண்டு. ஆனால் பெரியாரை அவமதிப்பவர் தப்பிப் பிழைக்க இயலாது.

Koviloor Digital Library

நவம்பர் - 18

அதி : பெண்வழிச் சேறல் குறள் : 901

மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

மனைவியை விரும்பி அவள் சொன்ன படி நடப்பவர் சிறந்த பயனை அடைய மாட்டார்; கடமையைச் செய்ய முடியாதவர் ஆவார்.

Koviloor Digital Library

நவம்பர் - 19

அதி : பெண்வழிச் சேறல் குறள் : 905

**இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.**

தன் மனையாளுக்கு அஞ்சி வாழ்பவன் எப்போதும் நல்லவர்க்கு நல்ல செயல் செய்வதற்கு அஞ்சுவான்.

Koviloor Digital Library

நவம்பர் - 20

அதி : பெண்வழிச் சேறல் குறள் : 908

நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நல்நுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்.

தம் மனையாள் வேண்டியவாறு நடப்பவர்கள் தம் நண்பர்களின் குறைகளைத் தீர்க்க மாட்டார்கள்; அறங்களையும் செய்ய மாட்டார்கள்.

Koviloor Digital Library

நவம்பர் - 21

அதி : வரைவின் மகளிர் குறள் : 912

பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து அதற்கு ஏற்றவாறு இனிய சொல் கூறுகின்ற பண்பில்லாத பொது மகளிரின் நடத்தையை ஆராய்ந்து விட்டு விடுக.

Koviloor Digital Library

நவம்பர் - 22

அதி : வரைவின் மகளிர் குறள் : 914

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருள்பொருள்
ஆயும் அறிவி ன்அவர்.

பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொது மகளிரின் இழிந்த இன்பத்தை அறிவினையுடையார் பொருந்த மாட்டார் (விரும்ப மாட்டார்).

Kovilnoor Digital Library

நவம்பர் - 23

அதி : கள் உண்ணாமை **குறள் : 921**

உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார்.

கள்ளின் மேல் விருப்பம் கொண்டு நடப்பவர் எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார்; தமக்குள்ள புகழையும் இழந்து விடுவர். பகைவர் எளிதில் வெல்வர் என்பதாம்.

Kovilbor Digital Library

நவம்பர் - 24

அதி : கள் உண்ணாமை **குறள் : 922**

உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

அறிவை மயக்கும் கள்ளை அறிவுடையோர் உண்ணாது விடுவாராக; சான்றோரால் நல்லவராக மதிக்கப்படாதவர் வேண்டுமானால் கள்ளை உண்ணலாம்.

Kovilloor Digital Library

நவம்பர் - 25

அதி : கள் உண்ணாமை **குறள் : 925**

கைஅறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல்.

ஒருவன் கைப் பொருளைக் கொடுத்து கள்ளுண்டு மயங்கிக் கிடப்பதற்குக் காரணம், செய்வது இன்னது என்று புரியாத அறியாமையே ஆகும்.

Koviloor Digital Library

நவம்பர் - 26

அதி : கள் உண்ணாமை குறள் : 926

துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

உறங்கினவர் செத்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளைக் குடிப்பவரும் அறிவு மயங்குவதால், விஷம் குடிப்பவரைவிட வேறுபட்டவர் அல்லர்.

Koviloor Digital Library

நவம்பர் - 27

அதி : கள் உண்ணாமை குறள் : 930

கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டுஅதன் சோர்வு.

ஒருவன் தான் கள் உண்ணாதபோது, கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவனைப் பார்த்தால் தன் நிலையும் இப்படித்தான் இருக்கும் என்று நினைக்க மாட்டானோ?

Kovilog Digital Library

நவம்பர் - 28

அதி : சூது　　　　　　　　　　　　குறள் : 939

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

ஒருவன் சூதாடுவதை மேற்கொண்டால், புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனை விட்டு நீங்கும்.

Koviloor Digital Library

நவம்பர் - 29

அதி : சூது குறள் : 940

**இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

இழக்கும் போதெல்லாம், மேன்மேலும் விருப்பம் கொள்கின்ற சூதைப்போல், உடம்பும் துன்பத்தால் வருந்த வருந்த உயிர் மேன்மேலும் அதனை விரும்பும்.

Kovilbor Digital Library

நவம்பர் - 30

அதி : மருந்து குறள் : 941

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

ஒருவனுடைய உணவும் செயல்களும் அளவுக்கு மேல் கூடினாலும் குறைந்தாலும் மருத்துவ நூலோர் வகுத்த வாதம், பித்தம், கபம் முதலிய மூன்றும் நோயைச் செய்யும்.

Koviloor Digital Library

டிசம்பர்

தன்னுடைய குழந்தைகளுக்குத் தொழில் சார்ந்த வேலைகளை (உழைப்பு) கற்றுத் தருகிறவன் செல்வத்தை வழங்குவதைவிட சிறந்த ஒன்றை வழங்கியவனாவான்.

Koviloor Digital Library

டிசம்பர் - 1

அதி : மருந்து குறள் : 942

**மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு, அருந்தியது
அற்றது போற்றி உணின்.**

ஒருவன் தான் முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து பின்பு உண்டானாயின் அவன் உடலுக்கு மருந்து என்று வேறு ஒன்று வேண்டுவதில்லை.

Koyiloor Digital Library

டிசம்பர் - 2

அதி : மருந்து **குறள் : 943**

அற்றால் அளவுஅறிந்து உண்க; அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.

ஒருவன் முன்பு உண்ட உணவு செரித்த பின்பு உண்பானாக; அவ்வாறு உண்பது பெறற்கரிய மானிட உடம்பைப் பெற்றவன் அதனை நீண்ட காலம் வாழ வைக்கும் வழியாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 3

அதி : மருந்து குறள் : 945

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

மாறுபாடு இல்லாத உணவை அளவு மீறாமல் மறுத்து அளவோடு உண்டால் உயிர் உடம்பில் வாழ்வதற்கு இடையூறான நோய் என்பது இல்லை.

Koviloor Digital Library

டிசம்பர் - 4

அதி : மருந்து குறள் : 946

இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

அளவுக்குச் சிறிது குறைவாகவே உண்பவனிடம் இன்பம் நீங்காமல் நிற்பது போல், அளவுக்கு மிகுதியாக உண்பவனிடம் நோயும் நிலைத்து நிற்கும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 5

அதி : குடிமை குறள் : 953

**நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.**

உயர்ந்த குடியின்கண் பிறந்தவர்க்கு வறியார் தம்மிடம் வந்தபோது முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொல் கூறுதலும், இகழாமையுமாகிய இந்த நான்கும் உரிய பேறுகள் என்று பெரியோர் கூறுவர்.

Koviloor Digital Library

டிசம்பர் - 6

அதி : குடிமை குறள் : 957

**குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம்; விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.**

உயர்குடியில் பிறந்தவரிடம் உண்டாகும் குற்றம் சிறிதாயினும் ஆகாயத்தில் உள்ள சந்திரனிடத்துக் காணப்படும் களங்கத்தைப் போல எல்லார்க்கும் நன்றாகத் தெரியும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 7

அதி : குடிமை குறள் : 959

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளை காட்டி விடும். அதுபோல் ஒருவர் பிறந்த குடியின் இயல்பை அவருடைய வாயிலிருந்து பிறக்கும் சொல் வெளிப்படுத்தி விடும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 8

அதி : மானம் **குறள் : 963**

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

உயர்குடிப் பிறந்தவர்க்கு நிறைந்த செல்வம் உண்டான போது யாவரிடத்தும் பணிவு வேண்டும். செல்வம் சுருங்கி வறுமை உண்டானபோது பணியாமையாகிய உயர்வு வேண்டும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 9

அதி : மானம் குறள் : 967

ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

ஒருவன் தன்னை இகழ்வார் பின்னே சென்று பொருள் பெற்று உயிர் வாழ்வதைக் காட்டிலும், அச்செயலைச் செய்யாமல் அதே நிலையில் இருந்து இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நல்லது.

Koviloor Digital Library

டிசம்பர் - 10

அதி : பெருமை குறள் : 972

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

மக்களாகப் பிறந்த எல்லோர்க்கும் பிறப்பு ஒரு தன்மையதேயாகும். ஆனால் அவ்வுயிர்களின் உயர்வு, தாழ்வு செய்யும் தொழில்களில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தவை.

Koviloor Digital Library

டிசம்பர் - 11

அதி : பெருமை குறள் : 973

**மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர்; கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ்அல் லவர்.**

செயற்கரிய செய்யாத சிறியவர்கள் உயர்ந்த நிலையில் இருந்தாலும் பெரியவரா கார். செயற்கரிய செய்த பெரியவர்கள் தாழ்ந்திருந்தாலும் சிறியவராகார்.

Koviloor Digital Library

டிசம்பர் - 12

அதி : பெருமை குறள் : 980

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பெருமை உடையவர்கள் அவமானத்தை (பிறர் குற்றங்களை) மறைப்பர்; ஏனைச் சிறுமை உடையவர் களோ எப்போதும் மற்றவரது குற்றத்தையே கூறுவர்.

Koviloor Digital Library

டிசம்பர் - 13

அதி : சான்றாண்மை **குறள் : 985**

ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

ஒரு செயலை முடிப்பவரது ஆற்றலாவது அதற்குரியவர்களைப் பணிந்து தம்மோடு சேர்த்துக் கொள்ளுதலாகும். அதுவே சால்புடையார் தம் பகைவரை அழிக்கும் கருவியுமாகும்.

Kovilloor Digital Library

டிசம்பர் - 14

அதி : சான்றாண்மை **குறள் : 989**

ஊழி பெயரினும் தாம்பெயரார், சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

சால்புடைமையாகிய கடலுக்குக் கரை எனக் கூறப்படுபவர், கடல் கரையுள் நில்லாமல் ஊழிக் காலத்தால் நிலை திரிந்தாலும் தாம் தம் அறநெறியிலிருந்து திரியார்.

Koviloor Digital Library

டிசம்பர் - 15

அதி : பண்புடைமை குறள் : 991

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.**

எவரிடத்திலும் எளிமையாகப் பழகினால் பண்புடைமை என்னும் சிறப்பினை எளிதில் பெறலாம்.

Koviloor Digital Library

டிசம்பர் - 16

அதி : பண்புடைமை குறள் : 994

நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறர்க்கும் தமக்கும் பயனுடையவராய் வாழ்பவரின் பண்பினையே உலகத்தார் பாராட்டுவர்.

Koviloor Digital Library

டிசம்பர் - 17

அதி : பண்புடைமை குறள் : 995

நகைஉள்ளும் இன்னாது இகழ்ச்சி, பகைஉள்ளும்
பண்புஉள பாடுஅறிவார் மாட்டு.

விளையாட்டின் போதும் பிறர் தன்னை இகழ்தல் ஒருவனுக்குத் துன்பம் தருவதாகும். ஆதலால் பண்புடையாரிடம் பகைவரிடத்தும் அந்த இகழ்ச்சி தோன்றாது. இனிய பண்புகளே உளவாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 18

அதி : பண்புடைமை **குறள் : 996**

பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

பண்புடையாரிடம் உலகியல் எப்போதும் தடையின்றி நடந்து கொண்டிருக்கிறது. அங்ஙனம் நடவாவிட்டால் அது மண்ணில் புகுந்து மறைந்து போவதாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 19

அதி : பண்புடைமை குறள் : 997

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள் பண்புஇல்லா தவர்.

நன்மக்கட்குரிய பண்பு இல்லாதவர்கள் அரத்தின் கூர்மை போன்ற கூரிய அறிவுடையவரானாலும் ஓரறிவுடைய மரத்துக்கு ஒப்பாவர்.

Koviloor Digital Library

டிசம்பர் - 20

அதி : பண்புடைமை குறள் : 1000

பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந் துஅற்று.

பண்பில்லாதவன் பெற்ற செல்வ மானது, சிறந்த பால் அது வைக்கப்பட்ட பாத்திரத்தின் குற்றத்தால் தன் இயல்பு திரிந்து கெடுவதுபோல் ஒருவர்க்கும் பயன் படாமல் கெட்டழியும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 21

அதி : நன்றிஇல் செல்வம் குறள் : 1001

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுஉண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல்.

பெருஞ் செல்வத்தை ஈட்டி வைத்தும் தன் உலோப குணத்தால் அதனை அனுபவிக்காதவன் உயிர் வாழ்ந்தாலும் இறந்தவனாகவே மதிக்கப்படுவான்.

டிசம்பர் - 22

அதி : நன்றிஇல் செல்வம் குறள் : 1004

எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

ஒருவராலும் விரும்பப்படாத செல்வ முடையான் தான் இறந்த பின் இவ்வுலகில் எஞ்சி நிற்பதாக எதனைக் கருதுவானோ?

Koviloor Digital Library

டிசம்பர் - 23

அதி : நன்றிஇல் செல்வம் குறள் : 1005

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.

பிறர்க்கு ஈவதும், தாம் அனுபவிப்பதும் ஆகிய இரண்டும் இல்லாதவர்க்குப் பலவாக அடுக்கிய செல்வம் இருந்தாலும் ஒன்றும் இல்லாததற்குச் சமமாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 24

அதி : நன்றிஇல் செல்வம் குறள் : 1006

**ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று
ஈதல் இயல்புஅலா தான்.**

தானும் அனுபவிக்காமல் தகுதியுடை யவர்க்கு ஒரு பொருளைக் கொடுக்கும் குணமும் இல்லாதவன் தான் பெற்ற செல்வத்திற்கு ஒரு நோயாவான்.

Koviloor Digital Library

டிசம்பர் - 25

அதி : நன்றிஇல் செல்வம் குறள் : 1008

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் துஅற்று.

வறியவர்க்கு அண்மையில் இருந்தும் ஒன்றும் கொடுக்காமையால் அவரால் விரும்பப் படாதவனுடைய செல்வமானது ஊரின் நடுவே உள்ள நச்சுமரத்தில் பழங்கள் பழுத்தாற் போன்றதாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 26

அதி : நாணுடைமை குறள் : 1012

ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

ஊனும், உடையும், மற்றவையும் மக்கள் உயிர்க்கெல்லாம் பொதுவாகும். பழி பாவங்களைத் தரும் செயல்களைச் செய்ய நாணுதல் மட்டுமே நன்மக்கட்குச் சிறந்த பண்பாகும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 27

அதி : நாணுடைமை குறள் : 1019

குலம்சுடும் கொள்கை பிழைப்பின்; நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை.

ஒருவன் ஒழுக்கம் தவறினால் அத்தவறு அவனுடைய குலப்பெருமையை அழித்து விடும். ஆனால் ஒருவனிடம் நாணம் இல்லையென்றால் அது அவனுடைய எல்லா நலன்களையும் அழித்துவிடும்.

Kovilloor Digital Library

டிசம்பர் - 28

அதி : குடிசெயல் வகை குறள் : 1023

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.**

'என் குடியை உயரச் செய்வேன்' என்று முயலும் ஒருவனுக்கு உதவுவதற்காகத் தெய்வம் ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு தானே முற்பட்டு நிற்கும்.

Koviloor Digital Library

டிசம்பர் - 29

அதி : குடிசெயல் வகை குறள் : 1025

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

குற்றமான செயல்களைச் செய்யாமல் தன் குடியை உயரச் செய்து வாழ்பவனை உலகத்தார் அவனுக்குச் சுற்றமாக விரும்பித் தானே சூழ்ந்து கொள்வர்.

Kovilloor Digital Library

டிசம்பர் - 30

அதி : உழவு குறள் : 1031

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.**

மக்கள் உழவுத் தொழிலைச் செய்யாமல் பிற தொழில்களைச் செய்ய விரும்பி அலைந்தும் முடிவில் ஏரால் உழு தொழிலைச் செய்பவர்களின் பின் செல்வர். ஆதலால் உழவுத் தொழிலே உயர்வானது.

Koviloor Digital Library

யார் பழியில் தனது பங்கைக் கூடுதலாகவும், புகழில் தனக்குரிய பங்கைக் குறைவாகவும் ஏற்றுக் கொள்கிறானோ, அவனே இணையற்ற தலைவன்.

Koviloor Digital Library

ஒரு நாள் பறக்கக் கற்றுக்கொள்ளப் போகிறவர், முதலில் நிற்கவும், நடக்கவும், ஓடவும், ஏறவும், ஆடவும் கற்றுக் கொள்ள வேண்டும். பறக்க நினைத்தாலே பறந்துவிட முடியாது.

நம்மை நாமே உருவாக்குவோம்!

Koviloor Digital Library

'நாம் ஒவ்வொருவருமே நமது சொந்த விதியை உருவாக்குபவர்களாக இருக்கிறோம். நாம் துயரப்படுவதற்கு நாம், நாமேதான் காரணம், வேறு யாரும் அல்லர். நாமே விளைவுகள்; நாமே காரணங்கள்!

மனித சங்கல்பம் அனைத்து சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான எல்லையற்ற சங்கல்பத்துக்கும் சுதந்திரத்துக்கும் முன்னே எல்லா ஆற்றல்களும், இயற்கையின் ஆற்றல்கள்கூட

கட்டாயம் தலைவணங்கியே தீரவேண்டும். இதுதான் கர்மநியதியின் விளைவு.

Koviloor Digital Library

எதை நினைக்கிறீர்களோ அதுவாக ஆவீர்கள் - நீங்கள் உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால் பலவீனர்கள் ஆவீர்கள்; வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்களாக ஆவீர்கள்; தூய்மையானவர்களாக எண்ணி னால் தூயவர்களாக ஆவீர்கள். எனவே, நம்மைப் பலவீனர் என நினைக்க வேண்டாம். நாம் வலிமை மிக்கவர்கள்; எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்.

- விவேகானந்தர்

Koviloor Digital Library

தினம் ஒரு திருக்குறள் தேன்

மூலமும் உரையும்

நர்மதா வெளியீடு